www.facebook.com/navamaniofficial
Like US ON facebook
Navamani Newspaper
READ e PAPER

NAVAMANI DAILY
நவமணி தினபத்தா
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

வியாழன்
2016 பெப்ரவரி 04 | ஹிஜ்ரி 1437 ரபிஉல் ஆகிர் 24
12 பக்கங்கள் | மணி 02 | ஒளி 020
விலை: 15/-

#156, Hospital Road, Kalubowila, Dehiwala | Tel: 0117393880 | Fax: 0117393883 | Email: editornavamani@gmail.com | Facebook: www.facebook.com/NavamaniOfficial | Twitter: twitter.com/NavamaniLK

பொன்சேகாவின் ஜனநாயக கட்சி ஐ.தே.முவில் ஒன்றிணைவு

அ.அருண் பிரசாந்த்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி நேற்று இணைந்துக் கொண்டது.

இதுதொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் நேற்று பிற்பகல் 2.38 எனும் சுபநேரத்தில் அலரிமாளிகையில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, லக்ஷ்மன் கிரியெல்ல, கபீர் ஹாஷீம், மலிக் சமரவிக்ரம போன்ற ஆளும் தரப்புப் பிரதானிகளும், பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா உள்ளிட்ட ஜனநாயக் கட்சித் தொண்டர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் அரசை ஸ்தாப்பிதற்கு தொடர்ச்சியாக ஒத்துழைத்துச் செயற்பட்ட பொன்சேகாவுக்கு, எம்.கே.டி.எஸ். குணவர்த்தனவின் மறைவினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு தேசிய பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படவுள்ள நிலையிலே மேற்படி இரண்டுத் தரப்புக்களும் ஒன்றிணைந்துள்ளன.

எம்.பியாக்கப்படும் சரத் பொன்சேகாவுக்கு முக்கிய அமைச்சு பதவியொன்றும் வழங்கப்படவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

68 ஆவது சுதந்திர தினம்
காலிமுகத்திடலில் பிரதான நிகழ்வு

காலிமுகத்திடலில் இன்று காலை நடைபெறும் நாட்டின் 68 ஆவது சுதந்திரதின விழாவில் 8971 முப்படை வீரர்கள் மற்றும் பொலிஸார்களினதும் அணிவகுப்பும் கலாசார நிகழ்ச்சிகளும் இடம் இடம் பெறும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, ராஜதந்திரிகள், அரசாங்க அதிகாரிகள் கலந்து கொள்ளும் இந்த விழாவை மிக அபிமானத்துடன் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் விஜித அபேவர்தன தெரிவித்தார்.

இன்று காலை

11 ஆம் பக்கம்

தேசத்தின் வெற்றிக்காக உறுதிபூணுவோம்

ஜனாதிபதி மைத்திரிபால வேண்டுகோள்

நாட்டு மக்கள் சகலரும் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஒரு சமூக அரசியல் சூழலை உருவாக்கும் பாதையில் தொடர்ந்து பயணிப்பதற்கு உறுதியாகவுள்ளோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள சுதந்திர தினச்செய்தியில் உறுதி தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெறும் தேசிய சுதந்திர

11 ஆம் பக்கம்

அனைவரும் ஒன்றுபட்டு கைகோர்த்து செயற்படுவோம்

பிரதமர் ரணில் அழைப்பு

ஒழுக்கநெறி மிக்கதேசமாக எமதுநாட்டை உயர்த்தி ஒரேநாடு - பாரியபலம் என்றஅடிப்படையில் அனைத்துமக்களையும் ஐக்கியப்படுத்திய நிலையில் 68 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடக் கிடைத்தமையானது நாம் பெற்றுக் கொண்ட வெற்றியாகும்.

11 ஆம் பக்கம்

எம்பிலிபிட்டிய ஏ.எஸ்.பிக்கு விளக்கமறியல்

பா.மலரம்பிகை

எம்பிலிபிட்டியவில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்ட மோதலில் சுமித் பிரசன்ன ஜயவர்தன என்ற இளைஞர் உயிரிழந்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் இரத்தினபுரி உதவிப் பொலிஸ் அத்தியட்சர் சமில் தர்மரத்னவை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு எம்பிலிபிட்டிய நீதவான் பிரசன்ன பிரனாந்து நேற்று உத்தரவிட்டார்.

மேலும், உதவிப்

11 ஆம் பக்கம்

கெஹெலிய ரம்புக்வெல்ல யாழ் நீதிமன்றில் ஆஜர்

பா.மலரம்பிகை

யாழ்.குடாநாட்டில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் காணாமல் போன லலித், குகன் வழக்கில் முன்னாள் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல யாழ். நீதிமன்றில் ஆஜராகியதனையடுத்து குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 13 திகதி

11 ஆம் பக்கம்

நேர்வழி அரசியல் பயணத்துக்காக ஐ.தே.முன்னணியில் இணைந்தோம்

பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா

அ.அருண் பிரசாந்த்

குறுக்கு வழியில் செல்லாமல் நேர் வழியில் எமது அரசியல் பயணத்தைத் தொடர்வதற்காகவே நாம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தோம் என்று பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறந்தவராக இருந்தாலும் அவர் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ராஜபக்ஷ கும்பல் இருக்கும் காரணத்தினாலேயே அக்கட்சியுடன் தமது கட்சி

11 ஆம் பக்கம்

பிரதி அமைச்சர் தலைமீடு
சூறாசபையின் சுதந்திரதின விழா ரத்து

ஆதில் அலி சப்ரி

தேசிய சூறாக் கவுன்சில் குருநாகலில் இன்று நடத்த ஏற்பாடு செய்திருந்த 'தந்திர தின விழாவை ரத்து செய்துள்ளது.

குருநாகலில் இன்று பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணிவரை நடத்தவிருந்த குறித்த சுதந்திர தின விழாவிற்கு குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதிப் போக்குவரத்து அமைச்சருமான அசோக அபேசிங்க ஆட்சேபனை செய்ததனை அடுத்து சர்ச்சை ஏற்படுவதனை தவிர்ப்பதற்கே சூறா சபை சுதந்திர தின விழாவை ரத்து

11 ஆம் பக்கம்

உலகை அச்சுறுத்தும் ஷிகா வைரஸ்
தடுப்பு மருந்தை கண்டுபிடித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஷிகா வைரஸுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் அதற்கான தடுப்பு மருந்தை கண்டு பிடித்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

தென் அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவை சேர்ந்த 23 நாடுகளை ஷிகா வைரஸ் ஆக்கிரமித்தது. இந்த ஷிகா வைரஸ்

11 ஆம் பக்கம்

தென்மாகாண முதலமைச்சரை கைதுசெய்யுமாறு உத்தரவு

செ.தர்ஷிகா

தென் மாகாண முதல்வர் ஷான் விஜேலால் டி சில்வாவை கைது செய்யுமாறு காலி நீதிவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தபால் மூலம் வாக்களிக்க வந்தவர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக கூறப்படும் சம்பவம்

11 ஆம் பக்கம்

இனவாதத்தை கக்குவதன் மூலம் நல்லாட்சியை வீழ்த்த முடியாது

அமைச்சர் ராஜித சேனாரத்ன

(பேருவளை பீ.எம். முக்தார்)

இனவாதத்தை தூண்டி இந்த நல்லாட்சி அரசாங்கத்தை வீழ்த்த சிலர் செயல்பட்டாலும் அவர்களின் அந்தக் கனவு என்றும் நிறைவேறாது. மஹிந்த ராஜபக்ஷ குடும்பமும் அவரைச் சுற்றி நிற்கும் வங்குரோத்து கட்சியினரும் அரசை கவிழ்க்கவும் பிளவுபடுத்தவும் எவ்வளவு முயற்சி செய்தாலும் அவை அனைத்தும் தவிடு பொடியாகி விடுவது உறுதியாகும் என அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறினார்.

பேருவளை மருதானையில் அமைக்கப்பட்டுள்ள நங்கூர தளத்தை கடந்த 28ம் திகதி மாலை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடற்றொழில் அமைச்சின் மூலம் 223 மில்லியன் ரூபா செலவில் இந்த நங்கூர தளம் அமைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர நங்கூர தளத்தை திறந்து வைத்தார். இராஜாங்க அமைச்சர் துலிப் வெதஆரச்சி அமைச்சின் செயலாளர் பேருவளை முன்னாள் நகரபிதா மஸாஹிம் முஹம்மத், முன்னாள் நகரசபை உறுப்பினர் உஸ்மான் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜயந்த அபேகுணவர்தன உட்பட பலரும் விழாவில் பங்குபற்றினர்.

அமைச்சர் ராஜித மேலும் பேசும்போது, டி.ஏ. ராஜபக்ஷ ஸ்ரீ.ல.சு.கட்சியை வளர்ப்பதற்கு பாடுபட்டார். என்றாலும் அவரது குடும்பத்தினர் இக்கட்சியை உடைத்து வேறு கட்சி ஆரம்பிக்க முயற்சி செய்கின்றனர். இனவாதத்தை தூண்டி அதன் மூலம் அரசியல் லாபம் பெற முயற்சி செய்கின்றனர்.

மஹிந்தவின் ஆட்சியைப் போல் இன்று வெள்ளை வான் மூலம் இளைஞர்கள் கடத்தப்படுவதில்லை. வடக்கில் பெற்றோர்கள் இன்று இரவில் நிம்மதியாக தூங்குகின்றனர். இளைஞர் - யுவதிகள் கடத்தப்படுவதில்லை. அன்றைய ஆட்சியில் இப்படியான நிலை இருக்கவில்லை.

முஸ்லிம்களுக்கும் அன்றைய ஆட்சியில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. ஹலால் பிரச்சினையை ஏற்படுத்தி இனவாதத்தை வளர்த்தார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் பேருவளையை தோற்கடிப்பதற்கும் என்னை தோல்வியுறச் செய்யவும் மஹிந்த ராஜபக்ஷ குடும்பமே பேருவளையில் கூடாரம் கட்டி பிரசாரம் செய்தார்கள். என்றாலும் பேருவளை மக்களும் களுத்துறை மாவட்ட மக்களும் என்னை முதலாம் இடத்திற்கு தெரிவு செய்தனர்.

பேருவளை தொகுதியையும் கைப்பற்றினோம். பேருவளை தொகுதியை கட்டியெழுப்ப பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டவுள்ளது என்றார்.

பல்லேகலை, மகாண சபை வளவில் அமைந்துள்ள மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள, மாணிட அபிவிருத்தி மத்திய நிலைய இணையத் தளத்தை மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். www.coopdept.cp.gov.lk என்பதே இணைய முகவரியாகும்.

(படம் - வத்துகாமம் நிருபர்)

திருகோணமலை தோப்பூரில் யானைகள் அட்டகாசம்

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் உதவி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட இக்பால்நகர் மீள்குடியேற்ற கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் குடியிருப்புக்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்கள் கடந்தகால யுத்த சூழ்நிலையின் போது தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறி, மீண்டும் இரண்டு வருடங்களுக்கு முன் தாமது சொந்த இடங்களில் மீள்குடியேறினர். சேனைப் பயிர்ச் செய்கை செய்து தமது ஜீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமது குடியிருப்புக்களையும் சேனைப் பயிர்களையும் காட்டு யானைகள் தொடர்ந்து துவம்சம் செய்யுமாக இருந்தால் தாம் பொருளாதார ரீதியாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஊர்போற்றும் உயர்தர வித்துக்கள் பாராட்டு விழா

(திகாமடுல்ல நிருபர்)

ஒலுவில் ஜம்மியத்துல் புர்கான் வாலிபர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள 2015 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற ஒலுவில் அல் ஹம்றா மகாவித்தியாலய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் 'ஊர்போற்றும் உயர்தர வித்துக்கள் பாராட்டு விழா' எதிர்வரும் சனிக்கிழமை (06.02.2016) அஸர் தொழுகையைத் தொடர்ந்து பழைய தபாலக வீதி திறந்த வெளியரங்கில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் அம்பாறை திட்ட முகாமையாளரும் பிரதம பொறியலாளருமான ஐ.எல். ஹைதர்அலி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம், கௌரவ அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கௌரவ எம்.எஸ்.எம். சம்சுதீன், மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிசாம், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அலீஸ், அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப் பாளர் ஏ.எல்.எம்.காசிம், அதிபர் எம். சரிப்டீன் உட்பட மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

குறிப்பாக ஒலுவில் அல் ஹம்றா மகாவித்தியாலயத்தில் 2015ஆம் ஆண்டு முதன் முதலாக கணித, விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் நூறு வீதம் சித்தியடைத்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் வைத்தியத் துறைக்கும் ஒருவர் பொறியியல் துறைக்கும் மற்றும் கலை, வர்த்தகத் துறைகளுக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களை ஒலுவில் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து மாபெரும் பாராட்டு நிகழ்வை நடாத்தவுள்ளனர்.

கஞ்சாவுடன் இருவர் கைது

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சித்தாண்டி மற்றும் ஏறாவூர் ஹிஸ்புல்லாஹ் நகர் ஆகிய இரு இடங்களில் கஞ்சாவுடன் புதன்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி வீதியில் வைத்து 4400 மில்லி கிராம் கஞ்சாவுடன் 25 வயதான நபரொருவரும் ஏறாவூர் ஹிஸ்புல்லாஹ் நகர் வீதியில் வைத்து 3650 மில்லி கிராம் கஞ்சாவுடன் 35 வயதான குடும்பஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களிடமிருந்துகிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஸ்தலத்துக்குச் சென்ற பொலிஸார் சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்ததோடு கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவங்கள்பற்றி பொலிஸார்மேலும் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாத்தளை மகாத்மா காந்தி சபையும், கண்டி உதவி இந்தியத்தூதுவராலயமும் இணைந்து மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச மண்டபத்தில் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான வினாவிடைப் போட்டி நிகழ்ச்சியில் முதலாம் இடத்தை மாத்தளை சங்கமித்தா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை மாத்தளை ஆமினா வித்தியாலமும், மூன்றாம் இடத்தை மாத்தளை இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. கண்டி உதவி இந்தியத்தூதுவர் செல்வி ராதா வெங்கட்டராமன், மகாத்மா காந்தி சபையின் தலைவர் சந்திரசேகரம் ஆகியோர் பரிசு வழங்கினர். படத்தில் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களைக் காணலாம்.

(படம் - வத்துகாமம் நிருபர்)

சட்டவிரோத வரி அறவிட்டவர் நீர்கொழும்பில் கைது

(நீர்கொழும்பு முஸாதிக் முஜீப்)

நீர்கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வரிப் பணம் செலுத்தாவர்களிடமிருந்து வரிப் பணம் அறவிடுவதற்காக நியமிக்கப்பட்டு பின்னர் தொழில் நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் பொது மக்களிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் சட்ட விரோதமாக பணம் அறவிடும் போது சனிக்கிழமை நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலாஹேன பிரதேசத்தைச் சேர்ந்த ஜயன் நெல்சன் என்ற நபரே கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபராவார். சந்தேக நபரிடமிருந்து மாநகர சபைக்கு சொந்தமான ஆவணங்கள் இறப்பர் முத்திரைகள், அடையாள அட்டை என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் நீர்கொழும்பு போலவலான பிரதேசத்தில் ஒருவரிடம் வரிப்பண கட்டணம் அறவிட வந்த போது தயாராக இருந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் சிறு வியாபாரிகள், சுய தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் பொது மக்கள் ஆகியோரை நேரடியாகச் சந்தித்து அவர்கள் மாநகர சபைக்கு வரிப்பணம் செலுத்த வேண்டும் என்று கூறி பெரும் தொகைப் பணத்தை சட்டவிரோதமாக அறவிட்டு வந்துள்ளார். தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வேறு ஒருவரின் மாநகர சபை அடையாள அட்டையையும் சந்தேக நபர் பயன்படுத்தியுள்ளார். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் ஒருவரின் பெயர் மற்றும் பதவி பொறிக்கப்பட்ட றப்பர் முத்திரை ஒன்றையும் சந்தேக நபர் பயன்படுத்தியுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பல்வேறு முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் திசாநாயக்க தலைமையிலான குழுவினர் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். சந்தேக நபரை மன்றில் ஆஜர் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி இந்து இளைஞர் மன்றம் உற்பட ஆறு இளைஞர் அமைப்புக்களைக் கொண்ட 'சிக்ஸ் வைஸ்' என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இன நல்லுறவிற்கான பொங்கல் விழாவில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, பௌத்த அமைப்புக்களின் இளைஞர் அமைப்புக்களும், பௌத்த, கிறிஸ்தவ இளம் மகளிர் அமைப்புக்களும் இணைந்து இதில் பங்கெடுத்தன. இதன் போது இடம் பெற்ற கலை நிகழ்வொன்றையும் மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். இவ்வைபவம் கண்டி இந்து இளைஞர் மன்றக்கட்டிடத்தில் இடம் பெற்றது.

(படம் - வத்துகாமம் நிருபர்)

டெங்கு நுளம்பு பரப்பிய ஹோட்டலுக்கு எதிராக குரணை பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டம்

(நீர்கொழும்பு முஸாதிக் முஜீப்)

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் நீர் கொழும்பு குரணை பிரதேசத்தில புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டலுக்கு எதிராக பிரதேசவாசிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியில் நீர்கொழும்பு நோக்கி செல்லும் திசையில் குரணை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்னும் திறக்கப்படாதிருக்கும் ஹோட்டலுக்கு எதிராகவும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய அதிகாரிகளுக்கு எதிராகவுமே இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டோர் குறித்த ஹோட்டலுக்கு முன்பாக ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இதன்போது அவர்கள் 'டெங்கு குரணை பிரதேசத்தை அழிக்கிறது' அதிகாரிகளே ஏன் இன்னும் மௌனம்?' 'மாநகர சபை அதிகாரிகளே சட்டத்தை உடனடியாக அமுல் படுத்தவும்', 'பாதிக்கப்பட்ட டெங்கு நோயாளிகளுக்கு நஸ்டயீடு வழங்கவும்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட கலோக அட்டைகளை பிரதேசவாசிகள் ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பில் பிரதேசவாசிகள் தெரிவிக்கையில்,

இந்த ஹோட்டலைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வசிக்கும் 14பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிறுவர்களும் அடங்குவர். தற்போதும் பலர் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இரண்டு வயது குழந்தை ஒன்றும் ஆறாவது நாளாக தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறது. இதுதொடர்பாக மாநகரசபையில் முறையிட்டோம். அதிகாரிகள் நடத்திய சோதனை நடவடிக்கையின்போது ஹோட்டலின் நீச்சல் தடாகம் மற்றும் இடங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. ஆயினும் உரிய வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நிர்மாணிக்கப்பட்டு இன்னும் திறக்கப்படாதிருக்கும் இந்த ஹோட்டல் தொடர்பாக அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

முஸ்லிம் மக்களின் சிங்கள அறிவை மெச்சும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்

(அக்குறணை நிருபர்)

இந்நாட்டு முஸ்லிம்கள் சிங்கள மொழியை சரளமாக பேசுவதையிட்டு தான் மிக மகிழ்ச்சி அடைவதாக அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்க தேரர் கலகம அத்ததஸ்ஸீ தேரர் தெரிவித்தார்.

கண்டி பூஜாபிட்டிய விஹாரையில் இடம் பெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் தெரிவித்ததாவது,

இன்று எமது இளைஞர்கள் மத்தியில் ஒழுக்கம், பண்பாடுகள் இல்லாமற் போயுள்ளது. சில சிங்கள இளைஞர்கள் ஆங்கிலத்தையும் வேறு மொழிகளையும் அறையும் குறையுமாக கற்றுக் கொண்டு தமது பெற்றோர்களுடன் உரையாடும் போது சிங்கள வசனங்களுக்கு மத்தியில் ஆங்கில வார்த்தை சிலவற்றையும் கலந்து பேசுகின்றனர். அது பெற்றோர்களுக்கு புரியாது. சிங்கள இளைஞர்களுக்கு சிங்கள மொழியை சரிவர கற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனாலும் இந் நாட்டு முஸ்லிம்கள் மிகவும் சரளமாகவும் அழகாகவும் சிங்கள மொழியை பேசுகின்றனர். இது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர்களுக்கு தெரியும் இந்நாட்டில் எதிர்காலத்தில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு சிங்கள மொழி தேவை என்று' அதற்காக அவர்கள் சிங்கள மொழியை கற்கின்றனர். சிங்கள பாடசாலைகளுக்கு சென்று மொழியை கற்கின்றனர். நான் கல்வி கற்ற பாடசாலையில் என்னுடனும் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்றார்கள் என்றார்.

இன்று இளைஞர்களது காதில் எப்போது பார்த்தாலும் ஓர் கையடக்க தொலை பேசி இருந்த வண்ணம் இருக்கும் இதனால் இவர்களது கல்வி சீர்கெட்டு விடுகின்றது. தொழில் ஒன்று செய்ய முடியாது போகின்றது. பெற்றோர்கள் இது பற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டும். சிறுமிகளுக்கு வயிறு தெரியும் வண்ணம்உடைகளை அணிவிக்க வெண்டாம். சிறு பிள்ளைகளுக்கு எதுவும் தெரியாது ஆனாலும் வயதாகும் போது அவர்களுக்கு அது சாதாரணமாகி விடும் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.

யாழில் வாகன விபத்து
மாணவன் உட்பட மூவர் காயம்

(பாறுக் ஷிஹான்)

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் நேற்று பாரிய வாகன விபத்து இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலை கட்டுவன் நோக்கி பயணித்த தனியார் பேருந்து இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை முந்திச்செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த நிலையில் தடம்மாறி பயணித்த குறித்த தனியார் பேருந்து அங்கிருந்த முச்சக்கரவண்டி ஒன்று டனும், மோட்டார் சைக்கிள் ஒன்று டனும் மோதியுள்ளது.

பேருந்தின் அதிக வேகம் காரணமாக மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் அருகிலிருந்த தனியார் வங்கி கட்டடத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் அருகில் இருந்த தனியார் வங்கியின் ஏ.ரி.எம் இயந்திரம் கடுமையாக சேதமடைந்துள்ளது. இதன் போது முச்சக்கரவண்டியை மோதித்தள்ளியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பயணித்த பாடசாலை மாணவன் கவலைக்கிடமான நிலையில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரவூப் ஹக்கீம் துருக்கி விஜயம்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று துருக்கி நோக்கி சென்றார்.

இவ் விஜயத்தின் போது, அவர், துருக்கி நாட்டின் ஜனாதிபதி தாயிப் எர்டோகான் உட்பட அரசியல் பிரமுகர்களை சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தேயிலை ஏற்றுமதி அபிவிருத்தி, வட - கிழக்கு மீள் குடியேற்றம் மற்றும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சினால் செயற்படுத்தப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு துருக்கி நாட்டினுடைய ஒத்துழைப்பையும் இதன்போது அவர், கோரவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதேவேளை, இலங்கையில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் உரிமைகள், அபிலாஷைகள் மற்றும் நலன்களை உறுதிப்படுத்துவது தொடர்பில் வலுவான யோசனைகளை தயாரிப்பது குறித்து கலந்துரையாட, பிரித்தானியா சென்றிருந்த, அமைச்சர் அங்கிருந்தே நேற்று அவர் துருக்கி நோக்கிப் பயணமானார்.

போதைப்பொருள் வர்த்தகத்துடன்
தொடர்புடைய இரு இலங்கையர் கைது

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய இலங்கை பிரஜைகள் இருவர் உள்ளிட்ட ஐவர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் தங்க விற்பனை தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்களை தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 20 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கை பிரஜைகள் உள்ளிட்ட ஐவரையும் சென்னை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தலைமன்னாரைச் சேர்ந்த இருவரே தமிழகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு
கைதிகளை விடுவிக்க தீர்மானம்

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உத்தேசிக்கப்பட்டுள்ள சில கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷாந்த தனசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பில் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

விடுதலை செய்யக்கூடிய கைதிகளின் பெயர் பட்டியல் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக் காட்டினார்.

மத்திய கிழக்குக்கு சென்ற
156 பேர் நாடு திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளில் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கிய இலங்கை பணியாளர்கள் 156 பேர் நேற்று காலை நாடு திரும்பினர். இதில் குவைத் இராச்சியத்திலிருந்து மாத்திரம் 100 பணிப்பெண்கள் நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் சவூதி அரேபியாவிலிருந்து 15 இலங்கை பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளதுடன் அவர்களில் தாய்வர் ஆண்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் தலையீட்டினால் குறித்த வெளிநாட்டு பணியாளர்கள் நாட்டிற்கு மீள அழைத்து வரப்பட்டுள்ளனர். நாடு திரும்பியுள்ளவர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

வெளிநாட்டு நாணயங்களை
கடத்த முற்பட்டவர் கைது

சட்டவிரோதமாக ஒருதொகை வெளிநாட்டு நாணயங்களைக் கடத்த முயற்சித்த 47 வயதுடைய சிங்கப்பூர் பிரஜை ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இவரது பயணப் பொதியிலிருந்து 42 ஆயிரம் யூரோ, 37 அமெரிக்க டொலர், 27 ஆயிரம் ஸ்ரேலிங் பவுன் மற்றும் 45 இலட்சம் இலங்கை ரூபாய் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இவற்றின் மொத்தப் பெறுமதி, 2,22,78,000 ரூபாய் என சுட்டிக் காட்டியுள்ள சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழிப் பாடசாலைகளில்
தமிழிலே தேசியகீதம் பாடப்படவேண்டும்
அமைச்சர் மனோ கணேஷன்

(எஸ்.ஏ.கரீம்)

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நடைபெறும் வைபவங்களில் தமிழிலே தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென தேசிய நல்லிணக்க மற்றம் கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேஷன் நேற்று கூறினார்.

கொழும்பு 12 மத்திய கொழும்பு இந்து கல்லூரியில் நடைபெற்ற வைபமொன்றில் உரையாற்று கையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி கல்லூரி அதிபர் தயனந்தி சிறிசோமா ஒய்வு பெறுவதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் தொடர்ந்து பேசிய அமைச்சர் கூறியதாவது,

தமிழ் மொழி பாடசாலைகளில் நடைபெறும் வைபங்கள், விழாக்கள் தமிழ் மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசிய கீதம் இசைக்க நாம் தயங்ககூடாது. தாய் மொழியிலேயே நாம் பாடாவிட்டால் தாய் நாட்டின் பற்றை எதிர்பார்க்க முடியாது.

இன்று சுதந்திர தின விழா வைபவத்திலும் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படும் நானும் அங்கு செல்வேன். அங்கே தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படாவிட்டால் நான்

வேதனையோடு திரும்பி வருவேன். வத்தளையில் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

அங்கு ஒரு தமிழ் பாடசாலை இலலை என்ற குறை நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. வத்தளையில் தமிழ் பாடசாலைக்காக 30 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கென நான் எமது அமைச்சின் மூலமும் 50 இலட்சம் ஒதுக்கவுள்ளேன்.

அரசில் இருந்து எமக்கு எல்லாம் கிடைக்கவில்லை. என்றாலும், நாம் நிதானமாக இருந்துதான் எமது உரிமைகளைப் பெற்றுகொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றுபட்டு
சுதந்திரத்தை அனுபவிப்போம்

அமைச்சர் ஹக்கீம் சுதந்திர தின செய்தி

நல்லாட்சியின் கீழ் ஜனநாயக மரபுகளுக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முயற்சியின் பயனாக உத்தேச புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என தாம் நம்புவதாகவும், இந்த சுதந்திர தினத்தின் போது இதனையே மக்கள் எதிர்பார்ப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹக்கீம் சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கோடுர யுத்தமும், கொடுங்கோல் ஆட்சியும் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் நல்லாட்சி நிலவும் வேளையில், இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினம் சகல இன மக்களாலும் மிகவும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்படுகின்றது.

இனரீதியாகவும், சமயரீதியாகவும், மொழிரீதியாகவும் நாட்டு மக்களை வேறுபடுத்தி நோக்கிய அப்போதைய ஆட்சியாளர்கள் மண்கவ்வியுள்ள சூழ்நிலையில், இவ்வாறு எல்லா இன மக்களும் ஒற்றுமைப்பட்டு தேசிய அரசாங்கத்தின் கீழ் சுதந்திர தினத்தை வரவேற்பது சாலப்பொருத்தமானது என அவரது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்குமாறு
மானிங்கல மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(இக்பால் அலி குருநாகல் நிருபர்)

சிலாபம் கல்விவலயத்திற்குட்பட்ட நாத்தாண்டிய கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள மாவிங்கல முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வடமேல் மாகாணகல்வி வலயப் பணிமனையின் வளாகத்திற்குள் பாடசாலையில் நிலவும் கடுமையான ஆசிரியர்பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்விப் பணிமனையின் முன்பு சுலோகங்களை ஏந்தியவாறு மாணவர்களும் பெற்றோர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுலோகங்களில் எங்கள் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லை. நாங்கள் ஏழைமாணவர்கள் கணிதப் பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லை. இஸ்லாம் பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லை என்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களுடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

181 பிள்ளைகள் இங்கு கல்வி பயிலுகின்றார்கள். இங்கு கல்விகற்பிப்பதற்காக ஏழு ஆசிரியர்கள் தான் உள்ளனர். ஒருநாளைக்கு மூன்று பேராவது விடுமுறை எடுப்பார்கள். இங்கு பிள்ளைகளை படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. நீண்டகாலமாக கணிதப் பாடத்திற்கான ஆசிரியர் இல்லை. இஸ்லாம் பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. எல்லோருக்கும் கிடைக்கின்ற பொதுவான கல்வி எங்களுடைய பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. புதிதாகவரும் ஆசிரியர்களும் அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி இடம்மாறுகின்றனர். ஆரம்பத்தில் இந்தப் பாடசாலையில் 400 பிள்ளைகள் வரையே கல்விகற்றார்கள். தகுதியானஆசிரியர்கள் இல்லாமையினால் தூர இடத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்கின்றனர் என தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய
ஓடுபாதையை அமைக்க நடவடிக்கை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதிய விமான ஓடுபாதையொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போது காணப்படுகின்ற விமான ஓடு பாதையானது மிகவும் பழைமை வாய்ந்தது எனவும், இந்த ஓடு பாதையை மேலும் ஒன்றோ அல்லது இரண்டு வருடங்களுக்கு பயன்படுத்த முடியாது எனவும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விமான ஓடு பாதையை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுமாக இருந்தால், இலங்கைக்கான வருமானம் பாரியளவில் இழக்கப்படுவதற்கான சாத்தியகூறுகள் தென்படுவதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். பயணிகளுக்கு சிறந்த விமான சேவைகளை வழங்கும் வகையில், விமான ஓடு பாதை நிர்மாணப் பணிகள் இந்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

வெளிநாட்டு தூதுவர்கள்
யாழுக்கு விஜயம்

இலங்கையின் 68வது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருக்கும் வெளிநாட்டு தூதுவர்கள் 35 பேர் கொண்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

விஜயம் மேற்கொண்ட தூதுவர் குழுவினர் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் போருக்கு பின்னான நிலைமைகள் தொடர்பிலான அவதானங்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை நாட்டில் தூதுவராலயங்கள் இல்லாத நாடுகளின் தூதுவர்கள் குறிப்பாக இந்தியாவில் உள்ள தூதுவர்களே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் வடமாகாண ஆளுனரின் ஒழுங்கமைப்பில் வடபகுதிக்கான விஜயத்தை நேற்றைய தினம் மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது வடமாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர், மற்றும் பிரதம செயலாளர் ஆகியோரை சந்தித்து வடபகுதியின் நிலைமைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான அவதானங்களை மேற்கொண்டனர்.

இந்த சந்திப்பு நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கான ஈரான் தூதுவர் முகம்மதி ஸாஈதி அமீராணி சபாநாயகர் கரு ஜயசூரியவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தையின் போது, இலங்கையின் அண்மைய அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்ததாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மதுபானசலைகள் பூட்டு

நாட்டின் 68ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் இன்றைய தினம் (04) மூடப்படும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று ரூபாவாஹினியில்
இம்தியாஸ் பாக்கிர் மாகார்

முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சுதந்திர தினம் பற்றி இன்று காலை 7 மணிக்கு தேசிய தொலைக்காட்சியில் உரையாற்றவுள்ளார்.

சகலருக்கும் நல்வாழ்வு
கிட்ட பிரார்த்திப்போம்

ஜம்இய்யத்துல் உலமா சுதந்திர தின செய்தி

இந்நாட்டில் ஒற்றுமை, சமாதானம், சகிப்புத் தன்மை என்பவற்றை கட்டியெழுப்பி பரஸ்பர விட்டுக்கொடுப்பு, நம்பிக்கை என்பன மூலம் சமாதான இலங்கையைக் கட்டியெழுப்பி சகலரும் நல்வாழ்வு வாழ பிரார்த்திப் போம் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது தாய் நாடான இலங்கை சுதந்திரமடைந்து 68 ஆண்டுகளைத் தாண்டியுள்ள இச்சந்தர்ப்பத்தில் சுதந்திர தின வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மகிழ்ச்சியடைகின்றது.

கடந்த 68 ஆண்டுகளுக்கு முன் நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்பதற்காக எமது நாடு வரலாறு நெடுகிலும் பல்வேறுப்பட்ட சவால்களைச் சந்தித்து வந்துள்ளது. அனைத்து இலங்கையரும் சமாதானத்தோடும், சகவாழ்வோடும் இந்நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்று நல்லாட்சி அரசு உறுதி கொண்டுள்ள நிலையில் இவ்வருட சுதந்திரத்தினத்தை நினைவு படுத்துகின்றோம்.

NAVAMANI DAILY නවමණී දිනපතා
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
04TH FEBRUARY 2016 - THURSDAY

சகலரும் உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு...

எமது தாய்த்திரு நாடு அதன் 68ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகின்றது.

அன்று எமது மூதாதையர்கள் பிரித்தானிய அரசுடன் சாத்வீகமாகப் போராடி சுதந்திரத்தைப் பெற்றனர்.

1505ஆம் ஆண்டு முதல் 1948வரை வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த எமது நாடு 1948இல் சுதந்திரம் பெற்று இன்று 68 வருடங்களைக் கடந்துள்ளது.

ஒப்பீட்டளவில் இந்த 68 வருட காலத்தில் நாடு பல துறைகளிலும் முன்னேறிய போதும் நாட்டில் வாழும் பிரதான இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நாடு தவறியுள்ளது.

இதன் காரணமாக நாடு கடந்த காலத்தில் பாரிய யுத்தம் ஒன்றை எதிர்கொண்டது. இந்த யுத்தம் காரணமாக சகல இனத்தவர்களுக்கும் அழிவு ஏற்பட்டது. பல இலட்சக்கணக்கானவர்கள் பலியெடுக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகினர். பலகோடி பெறுமதிமிகு உடமைகள் நாசமாகின. இவை எல்லாவற்றையும் விட ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்த சமூகங்களுக்கிடையே சந்தேகங்களும் பிளவுகளும் ஏற்பட்டன.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் ஆட்சிபீடமேற்றிய புதிய அரசு இந்த நாட்டில் கடந்த காலங்களில் நிலவிய பாரபட்சங்களை அகற்றி ஜக்கிய இலங்கைக்குள் சகலசமூகங்களும் ஒற்றுமையாகவாழக் கூடிய வழிவகைகளை உருவாக்குவதில் விஷேட அக்கறை காட்டி வருகிறது. நாட்டுக்கு புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றை வகுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவற்றை சுதந்திரத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளாகவே நோக்க வேண்டும்.

இந்த நாடு இன்று வேண்டி நிற்பது முக்கியமாக பொருளாதார சுதந்திரத்தையாகும். நாட்டில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் வறுமைக்கோட்டின் கீழ் காலாகால மாக கணிசமான அளவு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொழில்வாய்ப்பற்றிருக்கிறார்கள். நாட்டில் பொருளாதார ரீதியாக சுதந்திரத்தை ஏற்படுத்துவதன் மூலம்தான் இந்த மக்களுக்கு விமோசனம் அளிக்க முடியும். புதிய அரசு பத்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளது. இந்தவாக்குறுதிநிறைவேற்றப்படல்வேண்டும். அரசு பொருளாதாரரீதியாகநாட்டைக்கட்டியெழுப்புவதற்கு மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு நாடெங்கிலும் தொழிற்சாலைகளை ஆரம்பித்து வருகிறது. இதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்கு திட்டங்களை தயாரித்துள்ளது. முழு நாட்டினதும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு கட்சி பேதங்களுக்கப்பால் நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு சகல தரப்பினரும் பங்களிப்பு செய்ய வேண்டும்.

சிறுபான்மைதமிழ், முஸ்லிம்மக்களும்நெகிழ்வுத்தன்மையுடன் செயற்படுவது முக்கியமாகும். இதேவேளை இன்று இடம்பெறவுள்ளநாட்டின் 68ஆவதுசுதந்திரதின விழாவின் போது தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்படவுள்ளது.

1949ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது சுதந்திர தின விழாவின் போது தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டது.

நல்லாட்சி அரசில் சுதந்திர தின விழா முதல் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படவுள்ளது. இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தில் தமிழிலும் தேசிய கீதம் உள்ளது. இதற்கு முன்பு தமிழிழும் தேசிய கீதம் பல்வேறு அரச வைபவங்களில் பாடப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழு அமைச்சரவைக்கு செய்திருந்த சிபாரிசுகளின்படியே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த அரசாங்க காலத்தில் நியமிக்கப்பட்ட உண்மை களைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆலணைக்குழுவின் முக்கிய சிபாரிசுகளில் ஒன்றுதான் தேசிய கீதத்தை தமிழில் பாடவேண்டும் என்பதாகும்.

கடந்த அரசாங்க காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு செய்த சிபாரிசுகளை அமுல்நடத்துவதனை யாரும் எதிர்ப்பது நியாயமானதல்ல. என்றாலும் சில அரசியல் சக்திகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த முயற்சிகளைக் குழப்ப முற்படுகிறார்கள்.

தேசிய கீதத்தில் உள்ள வாசகங்களே தமிழிலும் உள்ளது. தமிழிலும் நாட்டுப் பற்று பற்றி கூறப்படுகின்றது. இந்த விடயத்தில் விதண்டாவாதம் பேசாது அன்று 1948இல் எமது தலைவர்கள் எடுத்த இத்தீர்மானத்தை அமுல்நடத்த சகலரும் உதவ வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலமே சுதந்திரத்தை அர்த்தபூர்வமுள்ளதாக்க முடியும்.

சுதந்திரப் போராட்டமும் முஸ்லிம்களின் நாட்டுப் பற்றும்

எம்.எம்.எம் நூறுல்ஹக்
சாய்ந்தமருது

இலங்கையின் 68ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று வெகுவிமர்சையாக கொண்டாடப்படும் வழக்கத்திற்கு ஏற்ப இம்முறையும் நமது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சுதந்திரம் என்பது ஆட்சி உரிமையை பெறுவதை மட்டும் குறித்து நிற்பதல்ல. மாறாக நாட்டு மக்கள் தமது சமூக, பொருளாதார, மேம்பாடுகளை அனுபவிக்க கூடிய சூழ்நிலைகளும் இருக்கவேண்டும் என்பதே இதுகுறித்த பொதுவான கருத்தாகும்.

நமது நாட்டின் சுதந்திரம் என்பது இரத்தம் சிந்திய போராட்டத்தின் ஊடாக பெற்றுக்கொண்டதல்ல. படிமுறை கிளர்ச்சிகளும், சுதந்திர உணர்வுகளும் குறிப்பிட்ட சிலரிடம் மேற்கிளம்பியதன் விளைவாக வந்தடைந்ததாகும்.

நமது நாட்டின் சுதந்திரத்தின் சிற்பிகளென வர்ணிக்கப்பட்டு நினைவுகூரப்படுபவர்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என நமது நாட்டின் பிரதான மூன்று சமூகங்களைச் சார்ந்தவர்களும் இறுப்புக்கொண்டுள்ளனர். இது ஒரே தளத்தில் நின்று ஒற்றுமையாக நமது மக்கள் சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான முன்னகர்ச்சிகளை முன்னிருத்தியிருக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

நாமது நாடு சுதந்திரம் பெறுகின்ற போது நமக்குள் காணப்பட்ட இன ஐக்கியம், ஒற்றுமை, சமூக பரஸ்பர உறவு என்பன பிற்காலங்களில் உடைவுகளை அடைந்து சமூகங்களுக்குள் பிரிவினைகளும், சந்தேக பார்வைகளும் வலுப்பெற தொடங்கிவிட்டன. குறித்த சிங்களச் சமூகத்திற்கு மட்டுமே இந்த நாடு என்கின்ற குறுகிய பார்வைக்குள் அகப்பட்டு இனவாதங்களும் முரண்பாடுகளும் பெருமளவில் பெருக்கெடுத்துள்ளது.

சுதந்திரம் நோக்கிய பயணத்தில் பிளவுகளுக்கு அப்பால் இத்தாட்டின் பிரதான சமூகங்களின் தலைவர்களாகவும் அரசியல் அதிகாரமுடையவர்களாகவும் காணப்பட்டவர்களின் ஒருமித்த செயற்பாட்டின் காரணமாக நமது நாடு சுதந்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக வழிவகுத்தன.

ஏறத்தாழ 2500 வருடகாலமாக முடிஆட்சியின் கீழ் இருந்து வந்த இலங்கையின் வரலாற்றின் இறுதி 500 வருடங்கள் அந்நியர் ஆட்சியின் கீழ் சிறைப்பட்டு இருந்ததை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் போர்த்துக்கேயரும் பின்னர் டச்சுக்காரரும் ஈற்றில் பிரித்தானியரும் நமது நாட்டை கைப்பற்றி ஆட்சி புரிந்ததை வரலாறு பதிவாக்கியுள்ளது.

இலங்கை முழுவதையும் தங்களது ஆட்சி அதிகார எல்லைகளாக கொண்டு ஆளுகின்ற நிலையினை போர்த்துக்கேயரும், டச்சுக்காரரும் ஏற்படுத்தவில்லை. மாறாக சில பகுதிகள் நமது நாட்டு மன்னர்களின் கைவசம் இருந்தன. இந்த நிலையினை முற்றாக மாற்றி முழு இலங்கையையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஆட்சி செய்யப்படுகின்ற நிலையினை பிரித்தானியரே உருவாக்கினர்.

பிரித்தானியர் 1796இல் இலங்கையின் கரையோரப்பகுதிகளையே முதலில் கைப்பற்றினர். பின்னர் 1802இல் ஏமியன்ஸ் ஒப்பந்தத்தின் படி பார்க்கிலும் இன்னும் சில முன்னேற்றங்களை நோக்கி பயணிக்க உதவின.

அரசியல் கட்சிகள் தோன்றுவதற்கும் சர்வஜன வாக்குரிமையை பெறவும் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் ஓர் உந்து சக்தியாக இருந்தது. ஆசியாவில் முதன்முதல் சர்வஜன வாக்குரிமை பெற்ற பெருமையை நமது நாடு பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பளித்தது.

இது இரத்தம் சிந்திய போராட்டங்கள் கொண்டு வந்த மாற்றங்கள் அல்ல. மாறாக பரஸ்பர புரிந்துணர்வுகளும் பேச்சுவார்த்தைகளும் இத்தகைய ஏற்றங்களையும், மாற்றங்களையும் தோற்றுவித்தன. அதுமட்டுமன்றி டொனமூர் அரசியல் சீர்திருத்தம் இலங்கையருக்கு சில பொறுப்பாட்சியையும் வழங்கியது. இவ்வாறு சுமார் 118 வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட படிமுறைகளினால் சோல்பரி அரசியல் திட்டத்தின் காலகட்டத்தில் தான் அதாவது 1948இல் சுதந்திர பிரகடனத்தோடு இலங்கைக்கு பொறுப்பாட்சி கிடைத்தது.

ஆயினும், இலங்கையின் நாடாளுமன்றத்தில் அதியுயர் தன்மையில் இங்கிலாந்தின் கோமறைக் கழகத்தின் ஆளுகைகள் இருந்து வந்தன. சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பிரித்தானிய மகாராணியாரே தொடர்ந்தும் இலங்கையின் இராணியாக இருந்தார். அவர் இந்நாட்டில் வசிக்காத காரணத்தால் அவரின் பிரதிநிதியாக மகாதேசாதிபதி இங்கு கடமையாற்றினார்.

பிரித்தானிய மகாராணியார் இலங்கையின் மகாதேசாதிபதியை தெரிவு செய்யவும் இலங்கைக்காக யுத்த பிரகடனம் செய்யவும் சமாதான ஒப்பந்தம் செய்யவும் உரிமை பெற்றிருந்தார்.

எமது நாட்டு பிரஜைகள் இலங்கையில் தமக்கு சரியாக நீதி வழங்கப்படவில்லை என்று எண்ணுமிடத்து பிரித்தானியா கோமறைக்கழகத்திற்கு மேன் முறையீடு செய்து வந்தனர். இவைகள் இலங்கை பூரணமான இறைமையை பெற்றிருக்

இலங்கை பிரித்தானிய சாம்ராஜியத்தின் ஒரு பகுதியாகியது. ஆயினும் 1815இல் சுதந்திர பகுதியாக விளங்கிய கண்டியை, பிரித்தானியர் கைப்பற்றியதோடு இலங்கை தீவு முழுவதையும் தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். இருந்தாலும் 1833 வரை கண்டி நிர்வாகம் தனிப்பட்ட முறையிலேயே நிர்வாகிக்கப்பட்டது.

கண்டி இராச்சிய வீழ்ச்சியே ஒரு நூற்றாண்டாக நினைவுகூரும் 1915இல் இலங்கையின் தேசிய இயக்க வளர்ச்சி பாரிய மாற்றங்களை நோக்கி செல்லத்தொடங்கியதை நாம் பார்க்கலாம். பிரித்தானிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணக்கரு இலங்கையரின் தேசிய உணர்வு பேணப்பட வேண்டும் என்ற ஆதங்கம் என்பன புதிய எழுச்சியையும் புத்துணர்வையும் பெற்றன எனக் குறிப்பிட முடியும்.

ஏனெனில், இவ்வாண்டில்தான் இலங்கைக்கு தேசிய சுதந்திரத்தை பெறுதல் என்பதை உறுதிமொழியாக கொண்டு தீவிர தேசிய வாதத்தை மனதில் நிறுத்திய இளைஞர்களின் வெளிப்பாடுகளும், செயற்பாடுகளும் உரமூட்டப்பட்டதாக தோற்றம் பெறுவதை இங்கு நாம் அவதானிக்கலாம். இத்தகையோர்களின் பொறிமுறைகள் அரசியல்வாதிகளுக்கு ஒரு சவாலாகவும் அதேநேரம் தேசியவாதிகளின் பக்கம் மக்களின் ஈர்ப்புத் திரும்பி அவர்களை ஆகரிக்கும் மனோபாவங்களும் பெருகத் தொடங்கின.

முழுமையான பொறுப்பாட்சி அரசாங்கம் என்பதும் முழுமையான சுயஆட்சி அரசாங்கம் என்ற கோரிக்கைகளும் இத்தேசிய வாதிகளின் முதன்மைப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களாக முன்னகர்த்தப்பட்டன.

1920களில் கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தம் அறிமுகமானது. இச்சீர்திருத்தத்தினால் இலங்கையருக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டன. அதனொரு கட்டம்தான் மானிய முறை சமுதாயம் நீக்கப்பட்டதாகும். மற்றும் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைவுகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இது வழிவகுத்ததும் குறிப்பிடத்தக்கது.

தேசிய விடுதலை இயக்கங்களும் அரசியல் அழுத்தக்குழுக்களும் தொடர்ந்து கொடுத்து வந்த அழுத்தங்களும் இணைந்து டொனமூர் சீர்திருத்தத்தை நோக்கி நகர வழியாக்கியது. இச்சீர்திருத்தம்தான் இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் போக்குகளிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி கடந்த காலத்தை கவில்லை என்பதற்கு உதாரணங்களாக பார்க்க கூடிய நிலைக்கு இட்டுச்சென்றது.

சுதந்திரம் என்பது ஒருவனின் சுய தர்மம் அல்லது சுய நிர்ணயம் தான் என பெசாங்குவே அபிப்பிராயப்படுகின்றார். அதே நேரம் வஸ்கி என்பவர் தனிப்பட்ட ஒருவரின் தற்கால நாகரிக வாழ்வே தன் சுய வாழ்க்கையை பாதுகாக்க கூடியது. அதற்கு அவசியமான சமூக நிலைகளின் மீது தடைகள் ஏற்படாது இருத்தலே சுதந்திரம் என வரையறுக்கின்றார்.

சுதந்திரம் என்பது தனியே அரசியல் சுதந்திரத்தினை மாத்திரம் அடைத்து கொள்வதை மட்டுப்படுத்துவது அல்ல. இதனை மேற்பார்த்த இரண்டு கூற்றுக்களும் வேறுபல கருத்துக்களும் உறுதி செய்கின்றன. இதனால் தான் நமது நாட்டு மக்கள் அரசியல், சமூக, பொருளாதார சுதந்திரங்களை பெற்றிருந்தால்தான் அம்மக்கள் உண்மையான சுதந்திர காற்றை சுவாசித்தவர்களாக கொள்ள முடியுமென்ற தீர்மானத்திற்கு வந்தனர்.

இதற்கேற்ப அன்றைய அரசியல் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் இதனை எடுத்துக்காட்டியதோடு, 1948இல் நமக்கு கிட்டியமை ஒரு பூரணமான சுதந்திரம் அல்லவெனக் கொள்வோரும் உள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை 1972இல் நமது நாட்டுக்கென்று நாமே உருவாக்கிக்கொண்ட முதலாவது குடியரசு அரசியல் அமைப்பிலிருந்தே சுதந்திரம் தொடங்குவதாக நம்புகின்றனர் அல்லது பார்க்கின்றனர்.

எது எப்படியிருந்தாலும் இலங்கையில் சுதந்திர வேட்கையில் ஈடுபட்ட சிங்கள, தமிழ் தலைமைகளோடு முஸ்லிம் தலைவர்களும் தமது தூய பங்களிப்புகளை உளத்தூய்மையோடு ஆற்றியிருக்கின்றனர். இந்த வரிசையில் டபிள்யூ.எம்.அப்துர்ரஹ்மான், சேர் முஹம்மது மாக்கான் மாக்கார், என்.டீ.எச்.அப்துல் காதர், முஹம்மத் இசாக், எம்.எல்.எம்.தியாழ், கலாநிதி டீ.பி.ஜாயா, சேராசிக் பரீட் போன்றோர்கள் முன்னிறுத்திப் பேசப்பட வேண்டியவர்களாவர்.

நாடா? சமூகமா? என்றொரு நிலை தோன்றினாலும் முஸ்லிம்கள் தமது சமூக உணர்வை பின்தள்ளிவிட்டு நாட்டு நலனில் அக்கறை கொண்டு செயற்படும் பாங்கிற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் மற்றும் மக்கள் உட்பட்டு வாழும் நிலை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதன் ஒரு உச்ச உதாரணத்திற்கு சிங்கள மன்னர்களுடன் கைகோர்த்து நின்று யுத்தத்தில் ஈடுபட்டு தங்கள் உயிர்களையே பறிகொடுத்த பதிவுகளையும் இலங்கை முஸ்லிம்கள் கொண்டிருக்கின்றனர்.

சுதந்திரத்திற்கு பின்னர் மட்டுமன்றி இலங்கையின் வரலாற்றில் சுமார் 2500 வருடங்கள் முஸ்லிம்கள் இந்நாட்டில் வாழ்ந்த வரலாற்றுக்காலம் தொடர்புபட்டு இருப்பதை வரலாற்றியலை சரியாக ஆய்வு செய்கின்ற போது துலங்கக்கூடிய ஒரு விடயமாகும்.

அதுமட்டுமன்றி இலங்கையில் முஸ்லிம்களின் இருப்பியல் நாட்டு நலனில் அக்கறை கொண்டதாகவே நிலைத்திருந்து வந்திருப்பதையும் பல்வேறு நிகழ்வுகள் நிரூபிக்கும் வகையில் இருந்து வருகின்றன. இதற்கோர் எடுத்துக்காட்டாக கூட ஆங்கிலப்படையிடம் சிங்கள மன்னரை காட்டிக்கொடுக்காது தன் உயிரையே பலிகொடுத்த முஸ்லிம் பெண்ணின் கதையை குறிப்பிட முடியும்.

முஸ்லிம்கள் இந்த நாட்டை துண்டாடுவதற்கோ துவம்சம் செய்வதற்கோ, ஆள்வதற்கோ ஒருபோதும் தங்களை முன்னிறுத்திய செயற்பாட்டில் இறங்கிய சரித்திரத்தை கொண்டவர்கள் அல்லர். எப்பொழுதும் நமது நாடு, நமது மக்கள் என்ற உணர்வை மதித்து நாட்டின் மன்னர்களையும் பின்னர் ஏற்பட்ட சுதந்திர அரசாங்கங்களையும் ஏற்று சுமுகமாக வாழ்ந்த வரலாற்றுத் தடயத்தையே சுவடுகளாக பதித்திருக்கின்றனர்.

நாட்டு பற்று ஈமானின் பாதி என்றொரு ஹதீஸ் காணப்படுகின்றது. இந்த ஹதீஸின் தரம் பற்றிய மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்தாலும் அது நமக்கு உணர்த்தும் கருத்தான தாய் நாட்டு பற்றுணர்வு இயல்பாகவே பதிவாகியிருக்கும் என்ற அம்சம் ஏற்கத்தக்கதே. அந்த வகையில் இலங்கை முஸ்லிம்கள் எந்தவொரு கட்டத்திலும் தாய் நாட்டுப்பற்றை விலத்தி வாழவில்லை என்ற வரலாற்றையே சொந்தம் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர், பின்னர் என்ற இரு கால கட்ட வரலாற்று நகர்வுகளை எடுத்துப்பார்த்தால் தாய் நாட்டு பற்றுக்கு எதிர்வினை ஆற்றாத முழுமையான ஒரு சமூகமாக முஸ்லிம்கள் இருப்பதை அவதானிக்க முடியும். அவ்வாறிருந்தும் சில சிங்கள - பௌத்த பேரினவாத ஆதிக்க சக்திகள் முஸ்லிம்களை கொச்சைப்படுத்தியும், நாட்டுக்கு துரோகம் இழைத்தவர்களாகவும் இன் நாட்டிற்கு அன்னியமானவர்கள் எனவும் அடையாளப்படுத்தும் பிற்போக்கான நிலையும் கடந்த ஒரு நூற்றாண்டாக உருவாக்கப்பட்டு இருப்பதும் மறைவன்று.

இது முஸ்லிம்களின் யதார்த்த பூர்வமான அணுகுமுறைகளுக்கும் நிலைத்திருத்தலுக்கும் எதிரானது என்பதை நமது மக்களுக்கு பதியவைப்பதிலும் அடுத்த சமூகத்தினர்களுக்கு தெளிவுபடுத்துவதிலும் நம்மவர்கள் பெரியளவில் ஆர்வம் காட்டாமை கவலைக்குரியது.

முஸ்லிம்களாகிய நமது தேசப்பற்றை மிக தெளிவாக வெளியுலகுக்கு எடுத்து சொல்ல வேண்டிய பொறுப்பு நமக்கு இருப்பதையும் எமது நாடு கண்ட ஒவ்வொரு இறுக்கமான கால கட்டங்களிலும் நாட்டுப்பற்றுடன் நம்மால் வழங்கப்பட்ட ஆரோக்கியமான பங்களிப்புக்களை மீள அடையாளப்படுத்த வேண்டிய அவசியத்தையும் இத்தருணத்தில் நினைவு படுத்தி, அதற்கேற்ற பொறிமுறைகளை நோக்கி கட்டமைப்புக்களை உருவாக்கிக்கொள்வோம்.

நவமணி
வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

மாயமான மலேசிய விமான விவகாரம்:

இந்தியப் பெருங்கடலில் தேடும் பணியை தொடங்கும் சீனக்கப்பல்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், காணாமல் போன மலேசிய விமானத்தை தேடும் பணிக்காக அதி நவீன கப்பல் ஒன்றை அனுப்பியுள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது.

'டாங்க் ஷை ஜியு 101' என்ற இந்தக் கப்பலில் அதிநவீன சோனார் ஒலி உணர்வு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இந்தக் கப்பல் தென் இந்தியப் பெருங்கடலில் காணாமல் போன மலேசிய விமானத்தை தேடும் பணியை தொடங்கும்என்றுசீனஅதிகாரிகள்தெரிவித்துள்ளனர். இந்தியப் பெருங்கடலின் கடற்படுகையின் கரடுமுரடான பகுதிகளில், ஆய்வாளர்கள் நெருங்கிச் சென்று நுணுக்கமாக ஆய்வு செய்ய இந்தக் கப்பல் உதவும்.

மலேசியன் ஏர்லைன்ஸ் விமானமான எம்.எச். 370 கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி 239 பேருடன் மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து சீன தலைநகர் பெய்ஜிங்கிற்கு சென்றது. விமானம் கிளம்பிய சிறிது நேரத்தில் மாயமானது.

விமானம் தெற்கு இந்திய பெருங்கடல் பகுதியில் விழுந்து மூழ்கி விட்டதாகவும், அதிலிருந்த 4 இந்தியர்கள் உட்பட அனைவரும் இறந்து விட்டதாகவும் மலேசிய அரசு அறிவித்தது. எனினும் இதுவரை, அந்த விமானத்தின் பாகங்களில் ஒரேயொரு பகுதி மட்டும் பிரெஞ்சுத் தீவான ரீயூனியன் கடற்பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

மீண்டும் ஏவுகணை பரிசோதனைக்கு தயாராகும் வடகொரியா

அமெரிக்கா - தென்கொரியா - ஜப்பான் கடும் கண்டனம்

செயற்கைக்கோள் ஏவுவதாக கூறி மீண்டும் ஏவுகணை பரிசோதனைக்கு தயாராகும் வடகொரியாவுக்கு அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆராய்ச்சி பணிகளுக்காக செயற்கைக்கோளை ஏவ திட்டமிட்டுள்ளதால் தங்கள் நாட்டின் கிழக்கு கடற்பகுதியில் கப்பல்கள் செல்ல அனுமதிக்கவேண்டாம் என சர்வதேச கடல் அமைப்பிற்கு வடகொரியா நேற்றுமுன்தினம் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணு ஆயுத பரவல் தடை சட்டத்தை மீறிய வகையில் கடந்தமாதம் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் குண்டை வெடிக்கச் செய்து வடகொரியா பரிசோதனை நடத்தியது.

அந்நாட்டின் இந்த அத்துமீறலானது அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட உலகநாடுகள் கடும் எதிர்ப்பையும், ஐ.நா.சபை புதிய பொருளாதார தடையை அந்நாட்டின்மீது விதிக்கவேண்டும் என்ற வலியுறுத்தலையும் சம்பாதித்துள்ள இந்நிலையில் வடகொரியா ஜனாதிபதியின் இந்த அதிரடி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பூமியை கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் செயற்கைக்கோளை ஏவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். எனவே, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை எங்கள் நாட்டு கடற்பகுதியில் கப்பல்கள் செல்வதை தவிர்க்கவேண்டும் என சர்வதேச கடல் அமைப்பு உள்ளிட்ட ஐ.நா.வின் மூன்று அமைப்புகளுக்கு வடகொரியா கடிதம் அனுப்பியுள்ளது.

மறைந்த வடகொரிய முன்னாள் ஜனாதிபதி கிம் ஜோங்-இன் பிறந்தநாளான எதிர்வரும் 16ஆம் திகதி இந்த செயற்கைக்கோள் ஏவப்படலாம் என சர்வதேச உளவு அமைப்புகள் மோப்பம் பிடித்துள்ள நிலையில் வடகொரியாவின் இந்த அத்துமீறலுக்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுத்து, கடுமையான பொருளாதார கட்டுப்பாடுகள் உள்ளிட்ட தடைகளை விதிக்க வேண்டும் என அமெரிக்க அரசின் வெளியுறவுத் துறை செயலாளர் ஜோன் கிர்பி கேட்டுக் கொண்டுள்ளார்.

செயற்கைக்கோளை ஏவும் போர்வையில் நீண்டதூரம் பாய்ந்து செல்லக்கூடிய நவீனரக ஏவுகணையை பரிசோதிக்க திட்டமிட்டுள்ள வடகொரியா உடனடியாக தனது முயற்சியை கைவிட வேண்டும். இல்லாவிட்டால் தனது செயலுக்கு பெரிய விலையை தர வேண்டியதாகி விடும் என தென்கொரியா ஜனாதிபதி மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவின் இந்த திட்டம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துபேசி ஆலோசித்து, எங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எதிராக அச்சுறுத்திவரும் அந்நாட்டின் திட்டத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம் என ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே குறிப்பிட்டுள்ளார்.



உலகச் செய்திகள்

அமைதிக்கான நோபல் பரிசு பெறும் ஐ.எஸ்ஸால் சீரழிக்கப்பட்ட பெண்

டோரில் போப் ஆண்டவர் பிரான்சிஸ், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பெண்கள் சைக்கிள் குழு, ஐ.எஸ். தீவிரவாதிகளால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பெண் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாதிகளால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட யசிதி இன பெண்ணான நாதியா முராத் தன்னைப் போன்ற வர்களுக்காக பாடுபட்டு வருகிறார். அவரது பெயரை நோர்வேயைச் சேர்ந்த அரசியல் தலைவர் ஒருவர் பரிந்துரை செய்துள்ளார்.

அதேபோன்று நோபல் பரிசு பெற்ற டெஸ்மன்ட் டுட்டு, போப் பிரான்சிஸின் பெயரை பரிந்துரைத்துள்ளார். ஆப்கானிஸ்தான் பெண்கள் சைக்கிள் குழுவை இத்தாலியைச் சேர்ந்த 118 அரசியல் தலைவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். வரும் 29ஆம் திகதி நோபல் குழுகூடி பரிந்துரை செய்யப்பட்டோர் குறித்து ஆலோசிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.எஸ். தீவிரவாதிகளால் வன்புணர்வுக் குட்படுத்தப்பட்ட பெண், போப் பிரான்சிஸ் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பெண்கள் சைக்கிள் குழு உள்ளிட்டோரின் பெயர்கள் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பலரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் நோர்வேயைச் சேர்ந்த நோபல் கமிட்டிக்கு 200இற்கும் மேற்பட்ட பரிந்துரை செய்யப்படும். இந்த வகையில் இவ் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஜெர்மன் கடற்கரையில் அடுத்தடுத்து இறந்து கரையொதுங்கும் திமிங்கிலங்கள்

ஜெர்மன் கடற்கரையில் மேலும் 8 திமிங்கிலங்கள் இறந்து கரை ஒதுங்கிய சம்பவம் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே ஆழந்தலை கடற்கரை பகுதியில் சுமார் 300 கிலோ முதல் ஆயிரம் கிலோ எடை கொண்ட 81 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின. இராட்சத திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியது குறித்து மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

அத்துடன் திமிங்கிலங்களை கடலுக்குள் திருப்பி விடும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், பெரும்பாலான திமிங்கிலங்கள் மணற்பரப்புக்கே திரும்பி வந்து இறந்தன. இதேபோல், மும்பை ஜூஹூ கடற்கரையிலும் 30 அடி நீள திமிங்கிலம் இறந்த நிலையில் கரையொதுங்கியது.

அதிர்ச்சி...

அடுத்தடுத்து இந்தியக்கடற்கரையில் திமிங்கிலங்கள் கரை ஒதுங்கிய நிகழ்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில்...

இந்நிலையில் இங்கிலாந்து கடற்கரையில், பெரிய அளவிலான திமிங்கிலங்கள் இறந்து கரை ஒதுங்கியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம் இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரை நகரமான ஸ்கீக்நெஸ் கரையில், 48 அடி நீளமுள்ள 3 திமிங்கிலங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கின. இது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஸ்பெயினியிலும்...

இந்நிலையில் தற்போது ஜெர்மன் கடற்கரையில் 8 திமிங்கிலங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஐரோப்பாவின் தெற்கு கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கிய திமிங்கிலங்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்துள்ளது.

சமூக விரோதிகள்...

கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள் அனைத்தும் ஏறக்குறைய ஒரே வயதை யொத்தவை எனக் கூறப்படுகிறது. அவற்றின் பற்களை சமூக விரோதிகள் சிலர் திருட முயற்சித்ததும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பாதை மாறும் திமிங்கிலங்கள்...

இனப்பெருக்கத்திற்காக அண்டார்டிகா கடல் பகுதிக்கு இடம்பெயரும் திமிங்கிலங்கள், பாதை மாறி எதிர்பாராத விதமாக இவ்வாறு கரை ஒதுங்குவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கழிவுகளே காரணம்...

ஆனால், கடலில் ஏற்படும் வெப்பநிலை மாற்றம் மற்றும் கொட்டப்படும் கழிவுகளால் இவ்வாறு திமிங்கிலங்கள் கரை ஒதுங்குவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

"சிரிய அகதிகளின் வருகையால் மக்கள் கொதித்துப் போயுள்ளனர்"

ஜோர்தான் மன்னர் அப்துல்லா தெரிவிப்பு

இலட்சக்கணக்கான சிரிய அகதிகளின் வருகையால், ஜோர்தான் மக்கள் கொதித்துப் போயுள்ளனர் என ஜோர்தான் மன்னர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

சிரியாவிற்கு உதவி வழங்குவது தொடர்பில், இலண்டனில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்கேற்பதற்காக இலண்டன் சென்றுள்ள ஜோர்தான் மன்னர் பிபிசி செய்தி சேவைக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூகநல சேவைகள், உட்கட்டுமானம், மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை வழங்குவதில், ஜோர்தான் பாரிய அழுத்தத்தை எதிர் கொண்டுள்ளது. இதன் காரணமாக, தமது நாடு எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அவர் எச்சரித்துள்ளார்.

ஜோர்தான், அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டும் என சர்வதேச சமூகம் எண்ணினால், அவர்கள் ஜோர்தானுக்கு மேலும் உதவ வேண்டும்.

சிரியா, மற்றும் அண்டை நாடுகளில் உள்ள 22.5 மில்லியன் சிரியர்களுக்கு உதவிப் பணிகளை வழங்க, அடுத்த ஆண்டு 7.7 பில்லியன் டொலர்கள் நிதியை வழங்க, ஐ.நா. எதிர்பார்த்துள்ளது.

தமது எல்லை நாடுகளான பாலஸ்தீனம், ஈராக், மற்றும் சிரியா ஆகிய நாடுகளில், யுத்தத்திலிருந்து தப்பிவரும் அந்த நாட்டவர்களுக்கு, ஜோர்தான், பல ஆண்டுகளாக அடைக்கலம் அளித்துவருகிறது. இந்த ஒரு சூழலில், தற்போது ஜோர்தான் சனத்தொகையில், சிரியர்கள் கிட்டத்தட்ட 20 வீதமாக வுள்ளனர்.

ஐ.நாவில் தம்மை அகதிகளாக பதிவு செய்து கொண்டுள்ள 4.6 மில்லியன் சிரியர்களில், ஜோர்தானில் 6,35,000 பேர் உள்ளனர். எவ்வாறாயினும், ஐ.நாவின் இந்த கணக்கில், பதியப்படாத மேலும் 10 இலட்சத்திற்கும் அதிகமான, ஏனைய சிரியர்கள் ஜோர்தானில் வாழ்ந்து வருவதாக, ஜோர்தான் அரசு தெரிவித்துள்ளது.

ஜோர்தானிலுள சிரியர்களில் 1 வீதமானோருக்கே, அங்கு வேலை செய்வதற்கான அனுமதியுள்ளது.

நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தில் 25 வீதமானவை அகதிகளுக்கு உதவுவதற்காக செலவிடப்படுகின்றது. இதனால் தமது சொந்த மக்கள், பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என மன்னர் அப்துல்லா தெரிவித்தார்.

அமெரிக்க வான் தாக்குதல்:

தரைமட்டமானது ஐ.எஸ். வானொலி நிலையம்

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினர் இயக்கி வந்த வானொலி நிலையம் அமெரிக்க வான் வழித் தாக்குதலில் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்

பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் 'கலீபாவின் குரல்' (Voice of the Caliphate என்ற வானொலி நிலையத்தை இயக்கி வந்தனர். அமெரிக்க போர் விமானங்கள் அங்கு, கடந்த திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் அந்த வானொலி நிலையம் அழிக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நங்கர்ஹார் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாக ஆப்கானுக்கான அமெரிக்க - நேட்டோ கூட்டுப்படை செய்தித் தொடர்பாளர் மைக் லாஹார்ன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு முதல் தலைதூக்கி வரும் ஐ.எஸ் அமைப்பில் புதிய ஆட்களைச் சேர்ப்பதற்காக, நங்கர்ஹார் பகுதியிலிருந்த வானொலி நிலையத்தின் மூலமாக ஐ.எஸ் தீவிரவாதிகள் வானொலியில் சட்டவிரோதப் பிரசாரம் மேற்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

உச்சகட்டத்தை நெருங்கும் யெமன் உள்நாட்டுப் போர்

30 பேர் பலி; நூற்றுக்கணக்கானோர் படுகாயம்

யெமனில் உள்நாட்டுப்போர் உச்சகட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தலைநகர் சனாவிலிருந்து சுமார் 65 கிலோமீற்றர் தூரத்திலுள்ள டாயில் நகரில் நேற்றுமுன்தினம் அரச படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே ஏற்பட்ட கடும் மோதலில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தனர்.

யெமனில் பதவிகவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் தற்போதைய ஜனாதிபதி அப்த் ரப்போ மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2014ஆம் ஆண்டு இந்த கிளர்ச்சியானது ஆயுதப் போராட்டமாக நிசைமாறியது.

யெமன் தலைநகரான சனா உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க சவூதி அரேபியா அரசின் உதவியை ஜனாதிபதி மன்சூர் ஹாதி நாடியதையடுத்து, கடந்த ஆண்டு மார்ச் முதல் சவூதி தலைமையிலான கூட்டு விமானப்படைகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளின்மீது குண்டு தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இத் தாக்குதல்களில் இதுவரை சுமார் 6 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் அந்நாட்டில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீர், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் திண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஐ.எஸ் வளர்ச்சியை தடுக்க முஸ்லிம் தலைவர்களுடன் ஆலோசனை

உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்

(திருச்சி சஹ்ரூல் ஹமீத்)

சர்வதேச தீவிரவாத அமைப்பான ஐ.எஸ் இந்திய இளைஞர்களை கவர்ந்திழுப்பதை தடுப்பது குறித்து முஸ்லிம் மதத் தலைவர்களுடன் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவிலிருந்து இதுவரை 23 இளைஞர்கள் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளதாகவும், அவர்களில் 6 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் சமீபத்தில் உளவுத் துறை எச்சரித்தது. மேலும் 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஐ.எஸ் தொடர்பில் இருப்பதால் அவர்களை உளவுத் துறை தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்திய இளைஞர்களை ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு மூளைச் சலவை செய்வதை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக முஸ்லிம் மதத் தலைவர்களுடன் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பின் போது தவறாக பயன்படுத்தப்பட்டு வரும் சமூக வலைதளங்கள், ஐ.எஸ் அமைப்பிடம் இந்திய இளைஞர்கள் ஈர்க்கப்படுவதற்கான காரணிகள், இந்தியாவின் அண்டை நாடுகளில் ஐ.எஸ் தீவிரவாதத்தின் வளர்ச்சி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

ஐ.எஸ் உட்பட அனைத்து வகையான தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக முஸ்லிம் அமைப்பு களும் மக்களும் அணிதிரள வேண்டும் என்று ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டார். அவரது கருத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் தலைவர்கள் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் வளர்ச்சியை தடுக்க தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

நல்லினக்கத்துக்கு முன்னுதாரணம் கிழக்கு

■ அ.அருண்பிரசாந்த்

கிழக்கில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான தேசிய மாநாடு கடந்த மாதம் 28 ஆம் திகதி கொழும்பு, கலதாரி ஹொட்டலில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்றது. மிகவும் வெற்றிகரமாக நடைபெற்ற இந்த மாநாட்டின் வினைவால் கிழக்கில் 50 ஆயிரம் தொழில்வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என கிழக்கின் முதல்வர் ஹபீஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

நவமணிக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டாறு குறிப்பிட்டார். அவரின் முழுமையான செவ்வி வருமாறு;

கேள்வி-கிழக்கு மாகாணசபைக்கும் மத்திய அரசுக்குமான உறவு முறை எவ்வாறு காணப்படுகின்றது?

பதில்- மிகவும் நெருக்கமான, இணக்கப்பாட்டுடன் இரண்டு தரப்புக்களும் இருந்து வருகின்றன. நிலவும் சில சில முரண்பாடுகளையும் இல்லாதொழிக்கும் வகையிலேயே காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதி, பிரதமர் கூட கிழக்கு மாகாண மக்கள் குறித்தும் அவர்களது அபிவிருத்தி குறித்தும் மிகவும் அக்கறையுடனேயே இருக்கிறார்கள்.

கேள்வி-நாட்டில் ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழுவினராலும், தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமினாலும் தற்போது இது தொடர்பில் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எம்மைப் பொறுத்தவரை நாட்டில் புறையோடிப் போயுள்ள முஸ்லிம் சமூகப் பிரச்சி னைகளுக்கு இதன்மூலம் சிறந்த தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பதே நிலைப்பாடாக இருக்கின்றது.

அதேநேரம், மாற்றமடையவுள்ள தேர்தல் முறைமையும் முஸ்லிம் சமூகத்துக்கும், தமிழ் சமூகத்துக்கும் பாதிப்பேற்படுத்தக் கூடாது என்பதிலும் நாம் குறியாக இருக்கி றோம். ஆகவே, இவர்கள் சார்ந்த பிரதிநிதித்துவம் குறையாத வகையில் தேர்தல் முறைமையில் மாற்றமொன்று கொண்டுவரப்படுமானால் நாம் நிச்சயமாக ஏற்றுக் கொள்வோம்.

கேள்வி-தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி தற்போது பல தரப்புக்களால் அரசுக்கு அழுத்தம் விடுக்கப்படுகின்றது. இதுகுறித்து கிழக்கின் முதல்வர் எனும் வகையில் உங்கள் கருத்து என்ன?

பதில்- இவர்களை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக உள்ளது. யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்களை எட்டப்போகின்றது.

இந்நிலையில், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகாரணமாக சந் தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்வதே நல்லாட்சிக்கு அழகாகும்.

அவர்களுக்கு ஒரு விமோசனம் வழங்கும் வகையில், அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும். இதன்மூலமே அனைத்து சமூகங்களுக்குள்ளும் ஒற்றுமையை நிலைநாட்ட முடியுமாக இருக்கும்.

கேள்வி-கிழக்கில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியளித்ததா?

பதில்- இதனை வெற்றி என சாதாரணமாகக் கூறுவதைவிட பெரும் வெற்றி என்று கூறினால் பொருத்தமாக இருக்கும். இம்மாநாட்டில் நாம் 250 முதலீட்டாளர்கள் கலந்து கொள்வார்கள் என்றே எதிர்ப்பார்த்திருந்தோம். ஆனால், இங்கு 600 இற்கும் அதிகமானோர் வருகைத் தந்திருந்தனர்.

மேலும், 25 இற்கும் மேற்பட்ட நாடுகளின் அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதானிகளும் இங்கு கலந்து கொண்டு தமது முன்மொழிவுகளையும், யோசனைகளையும் முன்வைத்தனர். இதில் சிலர் தற்போதும் நாட்டில் தங்கியிருந்து, தமது திட்டம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

குறிப்பாக இந்திய கேரள மாநிலத்தில் அவுல் போட் தயாரிப்பு நிறுவனமொன்று மட்டக்களப்பில் 75 அவுல் போட்களை தயாரிக்க இணங்கியுள்ளது. இதன்மூலம் மட்டும் 350 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில்வாய்பு ஏற்படும். இதுபோல், மீன்பிடித்துறை, பால் உற்பத்தி, ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்த இம்மாநாட்டில் பூரண இணக்கம் காணப்பட்டுள்ளது. இதன்மூலம் கிழக்கு வளம் பயன்படுத்தப்பட்டு வியாபாரம் அதிகரிப்பதுடன், புதிய சந்தைகளும் இங்கு உதயமாகும். இது கிழக்குக்கு மட்டுமன்றி முழுநாட்டுக்கும் பயனுள்ளதாக அமையும்.

கேள்வி-இதற்கு முன்னர் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கும் இந்த மாநாட்டுக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?

பதில்- முதலில் நடைபெற்ற மாநாடானது மிகவும் போராட்டத்துக்கு மத்தியிலேயே நடைபெற்றது. இதற்கு மத்திய அரசின் எந்தவொரு ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை. பல முதலீட்டாளர்கள் வருகைத் தந்திருந்தாலும் 12 முதலீடுகள் மட்டுமே சாத்தியப்பட்டது. சில இழுத்தடிப்புக்களாலும், வேறு சில தடைகளாலும் அந்த முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியளிக்காமல் போய்விட்டது என்றே கூற வேண்டும்.

எனினும், தற்போது நடைபெற்ற இதில், மத்திய அரசின் நேரடி பார்வை செலுத்தப்பட்டுள்ளது. முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மிகவும் அக்கறையுடன் இதுவிடயத்தில் செயற்படுகிறார்.

இதன்மூலம் முழுநாட்டுக்கும் நன்மையேற்படப் போவதை உணர்ந்து மத்திய அரசு அக்கறையுடன் செயற்படும் என்றே நான் நம்புகிறேன்.

கேள்வி-கிழக்கில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கூட்டாட்சி எவ்வாறு செல்கின்றது?

பதில்- (சிரிக்கிறார்) மிகவும் சுமூகமாக செல்கின்றது. அனைவரும் மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும், தமது பொறுப்புக்களை உணர்ந்தும் செயற்படுகிறார்கள்.

அந்தவகையில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், அவர்களது அபிலாஷைகள் குறித்து மிகவும் அக்கறையுடனும், கல்வி, சுகாதார விடயத்தில் பொறுப்புடனும் கிழக்கின் உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள். எமக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்பதையும் இங்குக் கூறிக்கொள்ள வேண்டும்.

கேள்வி-இந்த பரஸ்பரம் மூலம் தமிழ்- முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமாக இருக்கின்றதா?

பதில்- உண்மையைச் சொல்லப்போனால் கிழக்கு அரசியல்வாதிகளிடம் இருக்கும் இந்த ஒற்றுமை தற்போது படிப்படியாக மக்களிடம் இறங்குவதைக் காணக் கூடியவாறு உள்ளது. இது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

இதனை முன்னோக்கிக் கொண்டுச் செல்லவேண்டிய கடமை அரச தலைமைகளிடமே இருக்கின்றது.

நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து இவர்கள் மக்களுக்கு வழி காட்ட வேண்டும்.

கேள்வி-ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணத்துக்குள்ள வித்தியாசம் அல்லது விசேடத் தன்மை என்றால் எதனைக் கூறுவீர்கள்?

பதில்- கிழக்கின் அரசிலிருந்தே அனைத்தும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வித்தியாசமாகவே இருக்கின்றது. நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டரசை ஸ்தாபித்து ஆட்சியமைத்து வருகின்றன.

அத்தோடு, 26 வீத கடற்பரப்பு, 35 வீத மீன்பிடிக் கைத்தொழில், 30 வீத விவசாயம் என முழுநாட்டுக்கும் இங்கிருந்து பெரும் பங்காற்றப்படுகின்றது.

இத்தனை வளங்கள் இருந்தாலும், வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்டவர்கள் அதிகமாக வசிக்கும் மாகாணமும் இந்த கிழக்காகவே இருக்கின்றது. 30 வருட கால யுத்ததின் வடுக்கள் இன்னும் இம்மாகாணத்தில் தாக்கம் செலுத்துவதை உணரமுடியுமாக உள்ளது.

இவ்வாறு, பல விடயங்களுடன் கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களுடன் வேறுபட்டே இருக்கின்றது. ஆனால், மேற்கூறிய குறைகள் அனைத்தும் எமது ஆட்சி காலத்தில் நிச்சயமாக நிவர்த்தி செய்யப்படும்.

கேள்வி-இவ்வருடத்தில் கிழக்கில் உங்களால் ஏதாவது விசேட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளனவா?

பதில்- மத்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதி மூலம் எம்மால் பாரிய வேலைத் திட்டங்களை செய்ய முடியாதுள்ளது என்பதை இங்கு கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகி றேன். அதாவது, நிதி ஒதுக்கீட்டில் அதிகாரப் பரவலாக்கல் இல்லாமையால், மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளையோ அல்லது வேறு தேவைகளையோ செய்துக் கொள்ள எம்மால் முடியாதுள்ளது.

மத்திய அரசுக்கு 36 ஆயிரம் மில்லியன் ரூபா வருடத்துக்கு ஒதுக் கப்படும் போது மாகாணங்களுக்கோ வெறும் 40 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது.

இதனைக் கொண்டு கிழக்கிலுள்ள பிர தேச சபைகளுக்கு ஒரு வாகனத்தைக் கூட வாங்க முடியாத சூழ்நிலையே நிலவி வருகின்றது. இந்நிலையில், இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாம் நினைத்த அபிவிருத்திப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது?

ஆகவே, மாகாணசபைகளுக்கான நிதியை அதிகரிக்குமாறு நான் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எழுத்து மூலமாக தெரியப்படுத்தியுள்ளேன். இதனை நிறைவேற்ற வேண்டிய தேவையும் நல்லாட்சி அரசுக்கு உள்ளது. எனினும், தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியும் மிகவும் வினைத்திறனுடன் எம்மால் பயன்படுத்தப்படும்.

கேள்வி- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் வேலையில்லாப் பிரச்சினை எந்தளவில் உள்ளது?

பதில்- கிழக்கின் முக்கியமான பிரச்சினையே இத்தப் பிரச்சினை தான். எத்தனையோ பட்டதாரிகள் தொழில் இல்லாமல் இருப்பதை தற்போதும் காணக்கூடியவாறு உள்ளது. ஒருவகையில், இந்தக் காரணத்துக்காகவும் தான் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

எப்படியும், எமது ஆட்சிக்குள்ளேயே இந்த பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும். நாம் எதிர்ப்பார்த்துள்ளதைப் போல கிழக்கில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமானால் 50 ஆயிரம் தொழில்வாய்ப்புகள் உறுதி.

கேள்வி-கிராம இராச்சியத்தை நீங்கள் எதிர்ப்பதன் காரணம்....

பதில்- மாகாண சபைகளுக்குண்டான அதிகாரங்களை கண் திறந்துக் கொண்டிருக்கும்போதே பறிப்பது போன்ற ஒரு செயலாகவே இந்த கிராம இராச்சியம் இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரை இதுகுறித்து கதைக்கக் கூடக் கூடாது. இதன்மீதான எமது எதிர்ப்பு எப்போதும் மாறாது.

கேள்வி-நாட்டில் நிலவிய அசாதாரணச் சூழ்நிலைகாரணமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உங்களது நிலைப்பாடு?

பதில்- புதிது புதிதாக ஆணைக்கு ழுக்களை ஸ்தாபிக்காது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடித் தீர்வை பெற்றுக் கொடுக் அரசு முன்வர வேண்டும்.

சுற்றுலாத் ஸ்தலங் களுக்குச் செல்ல கிழக்கு மாகாணம் ஒரு மத்தியஸ்தமாக காணப்படு கின்றது.

தம்புள்ளை, பொலன்னறுவை, அநுராதபுரம், கண்டி போன்ற பல பகுதிகளுக்கு கிழக்கிலிருந்து இலகுவாகச் செல்லம். இதனால், மத்தளை போல மிகவும் பிரமாண்டமாக அல்லாவிடினும், ஓர் ஒடு பாதை, சுங்கவரி அதிகாரிகள் இருக்கும் ஒரு அலுவலகத்துடனேனும் ஒரு விமானநிலையத்தை அரசு இங்கு அமைக்க வேண்டும்.

மட்டக்களப்பு, திருகோணமலை என எங்கு விமானநிலையத்தை அமைத்தாலும் எமக்கு திருப்தியே. இதனை அரசு வெகு விரைவில் செய்யும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதேநேரம், திருகோணமலை மாவட்டத்தை நாட்டின் முக்கிய தொழில்பேட்டையாக மாற்றவுள்ள அரசின் செயற்பாடு மூலமும் கிழக்கில் பாரியதொரு அபிவிருத்தி ஏற்படுத்தப்படும்.

கேள்வி-ஒலுவில் பல்கலைக் கழகத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து முதல்வர் எனும் வகையில் ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

பதில்- ஒலுவில் மட்டுமன்றி, கிழக்குப் பல்கலைக் கழகத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் நாம் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்.

எமது ஆட்சிக் காலத்தின்போதே கிழக்கில் ஒரு பாரிய தொழில்நுட்ப மையத்தை ஸ்தாபிக்க வேண்டும் என திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இதற்கான ஒத்துழைப்பு மேற்படி இரண்டு பல்கலை கழகங்களுக் கூடாகவே பெற்றுக் கொள்ளப்படவுள்ளதால், முதலில் தொழில்நுட்ப துறையை இங்கு உறுதியாக ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மேற்படி பல்கலைக்கழகங்களில் நிலவிவரும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உரிய தரப்புக்களுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அதற்கிணங்க, வெகுவிரைவிலேயே அனைத்தும் சுமூகமாக நிறைவு பெறும்.

கேள்வி-கிழக்கில் நிலவி வரும் தமிழ்- முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகள் உங்கள் ஆட்சிக் காலத்திலாவது தீர்க்கப்படுமா?

பதில்- நிச்சயமாக. நான் ஆரம்பத்தில் கூறியதைப் போல இந்தப் பிரச்சி னைக்கான தீர்வு அரசியல்வாதிகளிடமே காணப்படுகின்றது. அவர்கள் முன்னுதாரணமாக இதுவிடயத்தில் செயற்பட வேண்டும்.

அதேநேரம், இது சில அரசியல் நோக்கத்துக்காக ஒரு சில விஷமிகளாலேயே தூண்டப்படுகின்றது என்பதையும் இங்கு கட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

ஒரு குழு அல்லது பல குழுக்களால் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற கிழ்த்தரமான செயற்பாடுகளால் ஒரு சமூகமே பாதிக்கப்படுகின்றது.

இதனை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும். எந்தவொரு சமயமும் இன்னொரு சமயத்தை அழிக்க வேண்டும் என போதிக்கவில்லை. இதனை மக்கள் உணர்வார்களாயின் எந்தவொரு பிரச்சி னையும் ஏற்படாது.

★★★★

நலம் வாழ

செ.தர்ஷிகா

இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகளை அரசு மேற்கொள்ள தவறுகின்றது

கேள்வி:- பொதுவாக மனிதர்களுக்கு ஏற்படுக்கின்ற இருதய நோய்களின் வகைகள் என்ன?

டாக்டர்:- இருதய நோயானது அதாவது (Heart Attack) எனும் நோயானது மூன்று வழிகளில் மனிதனுக்கு ஏற்படுகின்றது முதலாவதாக இருதயத்தில் உள்ள இரத்த நரம்புகளில் இரத்த ஓட்டம் தடைப்படுவதினால் வருவதாகும். இதனை ஆங்கிலத்தில் (Coronary Heart Hisease அல்லது Hypertensive Heart Disease என அழைக்கப்படும்) இதற்குத்தான் அதிகமாக இருதய சத்திர சிகிச்சை (பைபாஸ் bypass surgery) மேற்கொள்வது எனக் கூறப்படும். இவ்வாறான நோயானது கொலஸ்ரோல் மூலமாகவும், புகைப்பிடித்தல் காரணமாகவும் அதிகம் ஏற்படுக்கின்றது. இரண்டாவதாக பிறப்பிலேயே இளம் வயதினருக்கு வருகின்ற இருதய நோயாகும். அதாவது இருதயத்தில் சிறிய துவாரம் ஏற்படுதலாகும். இதனை நாங்கள் (Congenital heart Disease) எனக் கூறுகிறோம். மூன்றாவதாக இருதயத்திலிருந்து இரத்தத்தினை கடத்துவதற்காக சம்பந்தப்பட்டுள்ள நான்கு இரத்த குழாய்களிலும் ஏற்படுக்கின்ற நோயாகும் இதனை நாங்கள் (Rheumatic Heart Disease அல்லது Valvular Heart Disease) எனக் கூறுகிறோம். இவைகள்தான் இருதயத்தூடன் சம்பந்தப்பட்டு வரக்கூடிய பொதுவாக வரக்கூடிய நோய்களாகும். இதனையும் தாண்டி இருதய புற்று நோய்களும் இருக்கின்றன.

கேள்வி:- பொதுவாக இலங்கையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் இருதய நோய் அதிகரிப்பிற்கான காரணம் என்ன?

டாக்டர்:- முஸ்லிம் மக்கள் மத்தியில் மட்டும் இருதய நோயானது அதிகரித்து காணப்படுகின்றது என கூற முடியாது. தற்பொழுது முஸ்லிம் மக்கள் மத்தியில் கூடுதலான இருதய நோய் சம்பந்தமான மற்றும் ஏனைய வைத்திய நிபுணர்கள் கல்வி கற்று வெளியேறுவதினால் முஸ்லிம் மக்கள் தங்களுடைய உடல் சம்பந்தமான நோய்களை கண்டறிவதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஆரம்பத்தில் ஒருவருக்கு இருதயம் சம்பந்தமான நோய் அல்லது சத்திர சிக்கிச்சை செய்ய வேண்டுமென்றால் தங்களுடைய உயிர் பிரிந்துவிடக் கூடும் என்ற பயத்தின் காரணமாக மக்கள் வைத்தியர்களிடம் தங்களுடைய நோய்களை பற்றி கூறுவதற்கு அஞ்சியவர்களாக காணப்பட்டனர். முஸ்லிம்களினது உணவுப்பழக்கவழக்கத்தில் அதிகம் கொழுப்பு கலந்த உணவுகள் பயன்படுத்தப்படுவதினாலும், இளம்வயதில் புகைப்பழக்கத்திற்கு அடிமையாவதினாலுமே இவ்வாறான நோய் அதிகம் ஏற்பட காரணமாக அமையலாம்..

கேள்வி:- உங்களுடைய அனுபவத்தின் படி இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு ஏதும் வயதெல்லைகள் இருக்கின்றனவா?

டாக்டர்:- ஆரம்பத்தில் இந்த நோயானது 50 வயதினை தாண்டியவர்களுக்கே அதிகம் ஏற்படுவதினை அறிந்துள்ளோம். ஆனால் தற்பொழுது 30 வயதில் இருப்பவருக்கும் இது உண்டாகின்றது. சத்திர சிகிச்சையினை பற்றி பார்ப்போமானல் அதற்கு என்று வயதெல்லை கிடையாது. என்பது வயதானாலும் இருதயத்தினை ஆராய்ச்சி செய்து சத்திர சிகிச்சையினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

கேள்வி:- ஒரு நோயாளி சத்திர சிகிச்சைக்கு பின் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்?

டாக்டர் :- சத்திர சிக்கிச்சைக்கு பின் தொடர்ந்தேர்ச்சிய நோயாளி எடுக்க வேண்டிய மருந்துகள் இருக்கின்றன. அதனை சாதாரண வைத்தியர்களின் ஆலோசனைகளை நோயாளியானவர் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் முக்கியமாக கொழுப்பற்ற உணவினை கையாளுதல், புகைப்பிடித்தலினை முக்கியமாக தடை செய்தல், தினம்தோறும் உடற்பயிற்சியில் ஈடுபடுதல் போன்றவைகளை கண்டிப்பாக கடைப்பிடிதே ஆக வேண்டும்.

கேள்வி:- கறிவேப்பிலை சாப்பிடுவதானது இருதய நோயினை குணப்படுத்தும் எனக் கூறுகின்றார்களே, அதன் உண்மை நிலை என்ன?

டாக்டர் :- கறிவேப்பிலையினை அதிகமாக நாளாந்தம் தங்களுடைய உணவில் பச்சையாக சாப்பிடுகின்ற பொழுது இரத்தத்தில் அதிகரிக்கின்ற கொலஸ்ரோலின் அளவினை கட்டுப்படுத்த முடியும் என்ற முடிவானது விஞ்ஞான ரீதியாக இன்னும் நிருபிக்கப்படா விட்டாலும் தான் நம்பிக்கை கொள்வதாகவும் தன்னிடம் வருகின்ற இருதய நோயாளிகள் மற்றும் இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவானது அதிகம் உள்ளவர்களின் இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோல் அறிக்கையினை பார்க்குமிடத்தில் கொலஸ்ரோலின் அளவானது அதிகளவில் குறைந்துள்ளதனை பார்க்கக்கூடியதாக உள்ளது. அதற்கு முக்கிய காரணமாக குறித்த அந்த நோயாளிகள் அதிகமாக பச்சையாக கறிவேப்பிலை மற்றும் வெள்ளைப்பூண்டு சாப்பிட்டமையாகும். ஆகையால் என்னை சந்திக்க வருகின்ற குறிப்பிட்ட நோய்களை உடைய நோயாளர்களுக்கு அதிகளவில் கறிவேப்பிலை உண்ணுமாறு ஆலோசனை வழங்குவதும் உண்டு. என்னை பொறுத்தமட்டில் கறிவேப்பிலை எனும் அந்த தாவர இலையில் கொழுப்பில் உள்ள கொலஸ்ரோலின் அளவினை கட்டுப்படுத்த கூடிய இரசாயன பதார்த்தங்கள் இருக்கக்கூடும் என்ற வகையிலேதான் கறிவேப்பிலை சாப்பிடும் நோயாளிகளின் இரத்த பரிசோதனை அறிக்கையினை பார்க்கின்ற போது சாதகமான விடை கிடைக்கின்றது.

கேள்வி:- குழந்தைகள் மத்தியில் கொலஸ்ரோல் அதிகரிப்பிற்கான காரணம் என்ன?

டாக்டர்:- முக்கியமாக இதற்கு எமது உணவுப்பழக்கவழக்கமே பிரதான காரணமாகும். Fast food எனப்படும் கொழுப்புச் சத்து அதிகம் நிறைந்த உணவுகளை அதிகமாக எமது பிள்ளைகளுக்கு கொடுப்பதன் காரணமாக குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்து பருமன் அடைந்து விடுகின்றனர்.

கேள்வி:- இருதய நோயுள்ளவர்கள் அரசாங்க வைத்தியசாலையினை நாடிச்செல்லாமல் அதிகளவிலான பணத்தினை செலவு செய்து தனியார் வைத்தியசாலையினை நாடிச்செல்வதன் நோக்கம் என்ன?

டாக்டர் :- அரச வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிக்கிச்சைக்கான வசதிகள் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் நீண்ட நாட்கள் அல்லது வருடக் கணக்கில் சத்திர சிக்கிச்சைக்காக காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது. பொதுவாக இலங்கையில் மூன்று வைத்தியசாலைகளில் மட்டுமே இவ்வாறான இருதய சத்திர சிக்கிச்சையினை மேற்கொள்ளக்கூடிய அரச வைத்தியசாலைகள் இருக்கின்றன. அதாவது கொழும்பு,கண்டி, காலி. ஆகவேதான் மக்கள் மிகவிரைவில் குணமடைய வேண்டும் என்ற நோக்கத்திலும் அதிகளவிலான வசதிகளை கொண்டமைந்திருக்கும் தனியார் வைத்தியசாலைகளை தாங்கள் செலவழிக்கும் பணத்தின் தொகையினை கருத்தில் கொள்ளாமல் நாடிச் செல்கின்றனர்.

கேள்வி:- இலங்கையில் பத்திற்கும் அதிகமான வைத்தியசாலைகள் போதனா வைத்தியசாலைகளாக இருந்து ஏன் அவ்வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிக்கிச்சையினை மேற்கொள்வதற்கான வசதிகளை அரசு மேற்கொள்ள தவறுகின்றது?

டாக்டர் :- இருதய சத்திர சிக்கிசையானது சத்திர சிகிச்சைகளில் மிக முக்கியமானதாகும் அந்த வகையிலே இருதய சத்திர சிகிச்சைக்கான நவீன உபகரணங்களுக்கும் மருந்துவகைகளுக்கும் அரசு அதிகளவிலான பணத்தினை செலவு செய்ய வேண்டி ஏற்படுவதினாலேயே குறிப்பிட்ட அரச வைத்தியசாலைகளிலேயே இவ்வசதி குறைந்தளவில் காணப்படுகின்றது. அதனோடு மிகத்திறமையாக பயிற்றுவிக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள், தாதிமார்கள் தேவைப்படுகின்றனர்.

கேள்வி:- நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியுமா?

டாக்டர் :- நிச்சயமாக மேற்கொள்ள முடியும் அதில் ஒரு பிரச்சனையும் கிடையாது. சத்திர சிகிச்சைக்கு சில நாட்களுக்கு முன்பாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு அவர்களுடைய இரத்தத்தில் மற்றும் சிறுநீரில் இருக்கின்ற சீனியின் அளவினை மருந்துகள் மூலமாக அல்லது கூடுதலாக இன்சுலின் மூலமாக சீனியின் அளவினை குறைத்து இருதய சத்திர சிகிச்சையினை வெற்றிகாமாக மேற்கொள்ள முடியும். பொதுவாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உடம்பில் ஏற்படுகின்ற புண் குணமடைவதற்கு அதிககாலம் எடுப்பதினாலேயே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கேள்வி:- இலங்கையில் மூன்று வைத்தியசாலைகளில் மட்டுமே இருதய சத்திர சிகிச்சைக்கான வசதிகள் உள்ளது. அந்தவகையிலே அனைத்து மக்களும் இவ்வசதியினை அரசாங்கம் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டுமென் றால் அரசு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

டாக்டர்:- அரசாங்கம் மிக விரைவில் யாழ்ப்பாணத்திலும் குருணாகலிலும் உள்ள போதனா வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கான சகல நடவடிகைகளையும் மேற்கொள்ள இருக்கின்றது. இரண்டு மூன்று வருடங்களுக்குள் இந்த பிரச்சினைகளுக்கு அரசானது கூடிய விரைவில் தீர்வினை பெற்றுக்கொடுக்கும்.

கேள்வி:- ஒரு இருதய சத்திர சிக்கிச்சை நிபுணரினால் ஒரு நாளைக்கு எத்தனை சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும் உங்களுடைய பார்வையில்?

டாக்டர் :- ஒரு சத்திர சிகிச்சை நிபுணரினால் ஒரு சிகிச்சையினை அல்லது ஆகக் கூடியது இரண்டு சத்திர சிகிச்சைகளையே மேற்கொள்ள முடியும். சில நோயாளிகளின் நிலைமைகளை கருத்தில் கொள்ளும்பொழுது ஆறு மணித்தியாலங்களுக்கும் அதிகமாக தேவைப்படுகின்றது.

கேள்வி:- நாட்டின் பல பிரதேசங்களுக்கும் சென்று வருகின்ற வைத்தியர் என்ற ரீதியில் வடகிழக்கில் இருக்கின்ற இருதய நோயாளர்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்?

டாக்டர்:- இருதய நோய்களை கண்டு பிடிப்பதற்கான நவீன பரிசோதனைகள் ஆரம்பத்தில் தேவைப்படுகின்றன. அவ்வாறான பரிசோதனைகள் கூட நான் ஏற்கனவே குறிப்பிட்ட வைத்தியசாலைகளிலேயே காணப்படுகின்றது. அத்தோடு பரிசோதனைகளுக்காகவும் வடகிழக்கில் உள்ள நோயாளிகள் கொழும்பு கண்டிக்கு வந்து பல வாரங்கள் காத்திருக்க வேண்டிய நிலைமைதான் நிலவுகின்றது.

கேள்வி:-வெளிமாவட்டங்களில் இருக்கின்ற அதிமான இருதய நோயாளர்களுக்கு உங்களை சந்திக்கின்ற வாய்ப்பு அரிதாகவே இருக்கின்றது அவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனை என்ன?

டாக்டர் :- நான் தற்பொழுது கொழும்பு நாரஹேன்பிட்டி கிரிமண்டல மாவத்தையில் உள்ள ஆசிரி சேர்ஜிகல் வைத்தியசாலையில் எனது மருத்துவ சேவையினை வழங்கி வருகின்றேன். நோயாளிகளை எந்த நேரத்தில் சந்திப்பதற்கும் நான் தயாராக இருப்பதோடு தற்போது அரசவைத்தியசாலைகளில் குழந்தைகளுக்கான இருதய சத்திர சிகிச்சையினை நான் மேற்கொண்டு வருகின்றேன். அதனை தனியார் வைத்தியசாலைகளில் நினைத்தபடி மேற்கொள்ள முடியாது. அதற்கு அதிகளவிலான வசதிகள் தேவைபடுகின்றது. அவை சம்பந்தமான அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

■ அஹமட் இர்ஷாட்

கண்களின் சோர்வினை தடுக்கும் பயிற்சிகள்

தற்போதைய வேகமான காலகட்டத்தில் அதிக வேலைப்பளுவினால் அசதியின்மையாலும் கண்களுக்கு சோர்வு ஏற்படுகின்றது. அதனால் கண்கள் பளிச் சென்று இல்லாமல் காணப்படும்.

உடற்பயிற்சி போலவே சீன மக்கள் கண்களுக்கு பயிற்சி எடுக்கும் பழக்கம் தான் இதற்கு காரணம். இந்த பயிற்சிகள் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வோம். முதலில் ஒரு நாற்காலியில் நேராக அமர்ந்து கொள்ள வேண்டும். பின்னர் ஒவ்வொரு பயிற்சியாக செய்தால் போதும். கண்ணாடி இல்லாமலே பார்வை பளிச்சிடும்.

பயிற்சி 1: தலையை அசைக்காமல் கண்களை வலமிருந்து இடமாகவும் பிறகு இடமிருந்து வலமாகவும் பார்க்க வேண்டும். இப்படி 8 முறை செய்ய வேண்டும். எவ்வளவு தூரத்திற்கு பார்க்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு பார்க்க வேண்டும்.

பயிற்சி 2: மேல் இருந்து கீழாகவும், பிறகு கீழ் இருந்து மேலாகவும் பார்க்க வேண்டும். இதை 8 முறை செய்ய வேண்டும்.

பயிற்சி 3: கண்களை வலமிருந்து இடமாக கடிகார முற்களைப் போல 8 முறை சுழற்ற வேண்டும். இதேபோல இடமிருந்து வலமாக 8 முறை சுழற்ற வேண்டும்.

பயிற்சி 4: உங்களது கண்களுக்கு முன்னால் படுக்கை வசத்தில் 8 என்ற எண் இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலில் வலமிருந்து இடமாக கண்களால் 8 போடுங்கள். இதையே மாற்றி இடமிருந்து வலமாக செய்ய வேண்டும்.

பயிற்சி 5: கண்களுக்கு முன்னால் செங்குத்தாக 8 என்ற எண் இருப்பதாக பாவித்துக்கொள்ளுங்கள். முதலில் மேல் இருந்து கீழாகவும் பின் கீழ் இருந்து மேலாகவும் கண்களால் 8 போட வேண்டும்.

பயிற்சி 6: வலது கண்ணின் மேல் ஓரத்தையும் உற்று நோக்க வேண்டும். பிறகு வலது கண்ணின் கீழ் ஓரத்தை பார்க்க வேண்டும். இதை 8 முறை செய்ய வேண்டும். இதேபோல இடது கண்ணின் மேல் ஓரத்தையும் கீழ் ஓரத்தையும் பார்க்க வேண்டும். இதையும் 8 முறை செய்ய வேண்டும். ஒவ்வொரு பயிற்சியின் முடிவிலும் கண்களை சிமிட்ட வேண்டும். இந்த பயிற்சிகள் முடிந்ததும் நாற்காலியில் அமர்ந்தவாறே வலது உள்ளங்கையால் இடது கண்ணையும், இடது உள்ளங்கையால் வலது கண்ணையும் மென்மையாக அழுத்தம் கொடுக்காமல் மூட வேண்டும். சில வினாடிகள் கழித்து கண்களை சிமிட்டிக் கொண்டே கைகளை மெதுவாக எடுக்க வேண்டும். பிறகு எதிரே உள்ளவற்றை முழுமையாக பார்க்கலாம். தினமும் ஒரு முறை அல்லது இரு முறை இந்த பயிற்சிகளை செய்யலாம். 30 முதல் 40 நாட்களுக்கு தொடர்ச்சியாக செய்தால் நல்ல பலன் உண்டு.

குழந்தைகளுக்கான இயற்கை மருத்துவம்

தற்போது மருந்துகளை விட இயற்கை மருத்துவத்தை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அனைவரும் அனைவருக்கும் உதவும் இயற்கை மருத்துவம் குழந்தைகளுக்கு மட்டும் விதிவிலக்கல்ல. பல பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இயற்கை சிகிச்சைகளை மேற்கொள்வதில்லை. பொதுவாக அனைத்து இயற்கை வைத்தியமும் நான்கு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு பயன்படுத்தலாம். குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் இயற்கை வைத்தியம்.

இருமல்: குழந்தையின் பிஞ்சு உடல்களை எளிதில் தாக்கும் இருமல். இருமல், சளி வந்ததும் அழையாத விருந்தாளியாக வந்து விடுவது மூச்சு பிரச்சினை. இவை குழந்தைகளின் உடல்நலத்தை அடிக்கடி பாதிக்கும் பொதுவான நோய்தொற்றுகளில் ஒன்று. குழந்தைகளை தாக்கும் இருமல் பிரச்சனையிலிருந்து விடுபட ஓமவல்லி இலையை நன்கு கழுவி கொதிக்கும் சுடு தண்ணீரில் போட்டு ஒரு கப் வந்ததும் குழந்தைகளுக்கு குடிக்க கொடுக்கவும் குடிப்பதற்கு முன்னர் ஒரு சில நிமிடங்கள் ஓய்வு எடுக்க செய்ய வேண்டும். இந்த மூலிகை தண்ணீர் குடித்து வந்தால் இருமல், சளி பிரச்சனை வராமல் தடுக்கலாம். மேலும் இருமல் பிரச்சனைக்கு பெருந்துத்தி பூக்களைக்கொண்டு குளிர்பானம் தயாரித்து குழந்தைகளுக்கு தரலாம். குளிர்பானத்தை வடிகட்டி ஒரு சிறிய துணியில் ஈரமாக்கி குழந்தையின் தொண்டை, மூச்சு குழாய், நுரையீரல் போன்ற பகுதிகளில் தேய்க்க இருமல் குணமாகும்.

ஒவ்வாமை: அதிகம் உபயோகிப்பதனால் குழந்தைகளுக்கு அரிப்பு, ஒவ்வாமை போன்றவை ஏற்படுகிறது. இதனைத் தடுக்க குழந்தைகளை குளிக்க வைப்பதற்கு வைத்துள்ள தண்ணீரில் இரண்டு அல்லது மூன்று சொட்டு வெள்ளை வினிகர் கலந்து குழந்தைகளை குளிக்க வைக்கலாம்.

வாசகர்களே....

நோய்கள் தொடர்பான கேள்விகளுக்கு பிரபல டாக்டர்கள் பதிலளிக்கவுள்ளார்கள். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

டாக்டரிடம் கேளுங்கள்
நவமணி, 156, ஆஸ்பத்திரி வீதி, தெஹிவளை.

என்மீது அவதூறு கூற வேண்டாம் பிள்ளைகளை திருத்திக் கொள்ளுங்கள்

துலாஞ்சலி பிரேமதாஸ, மஹிந்தவுக்கு கடிதம்

(அஷ்ரப் ஏ சமத்)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வி துலாஞ்சலி பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

துலாஞ்சலி பிரேமதாஸவை இலக்காகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி தனது மகன் யோசித்த கைது செய்யப்பட்டதற்காக தன்னை இழிவு படுத்தி வெளியிட்ட கருத்தொன்றை அடிப்படையாக வைத்து இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யோஷித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதை அடுத்து ராஜபக்ஸ குடும்பத்தார் அனுபவிக்கும் நிலையை புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தாலும் சம்பவத்தை அடுத்து தம்மை இலக்காகக்கொண்டு சுமத்தப்படுகின்ற அரசியல் அவதூறுகளால் அவர்கள் தொடர்பில் அருவருப்பு ஏற்பட்டுள்ளதாக துலாஞ்சலி பிரேமதாஸ கூறியுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தல் காலத்திலும் மஹிந்த ராஜபக்ஷ தம்மீது அவதூறுகளை சுமத்தியதாக துலாஞ்சலி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

யோஷித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதிலோ முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதிலோ தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என கூறியுள்ள அவர், இவை அனைத்தும் ராஜபக்ஷ தமது குடும்பத்தாருடன் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட நிலைமை என குறிப்பிட்டுள்ளார்.

தமது தந்தையாரான காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் தாயார் ஹேமா பிரேமதாஸ ஆகியோர் தமக்கும் தமது சகோதரர் சஜித் பிரேமதாஸவிற்கும் இயற்கை நியதிகள் மற்றும் சட்டத்திற்கு அமைய வாழ்வதற்கு கற்றுக்கொடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தந்தை என்ற வகையில் அதனை பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்குமாறு துலாஞ்சலி பிரேமதாஸ, மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய வழக்கில் தாம் சாட்சியாளரோ அல்லது தொடர்புபட்டவரோ அல்லவெனவும் அவரது கடிதத்தில் கட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள நிலைமையை எதிர்கொள்வதற்காக அப்பாவி மக்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவதால் பலன் எதுவும் இல்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ கூறும்வகையில் தாம் குற்றம் இழைத்திருந்தும் விடுதலை செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பில் பொலிஸ் விசாரணை நடத்தி, அதற்கு காரணமாக இருந்த ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் எனவும் துலாஞ்சலி பிரேமதாஸ யோசனை முன்வைத்துள்ளார்.

காஸ்மீர் ஒற்றுமைத்தின அனுஷ்டிப்பு

இலங்கையில் சர்வதேச கருத்தரங்கு, புகைப்பட கண்காட்சி

காஸ்மீர் ஒற்றுமைத்தினமானது பெப்ரவரி 5ஆம் திகதி இந்திய ஆதிக்கத்திற்கு எதிராக போராடிவருகின்ற காஸ்மீர் மக்களுடன் இணைந்து உலக மக்களினால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் அமைந்துள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயம் காஸ்மீர் பிரச்சினையின் எதிர்கால போக்கு மற்றும் அதன் தோற்றம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்வதனுடாக பெப்ரவரி 5ஆம் திகதி காஸ்மீர் ஒற்றுமைத்தினத்தினை அனுஷ்டிக்கின்றது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானிய முன்னணி நிபுணர்கள் இக் கருத்தரங்கின் பொழுது காஸ்மீர் தொடர்பான வெவ்வேறு அம்சங்களைக் கொண்ட விரிவுரைகளை வழங்கவுள்ளனர். அத்துடன் காஸ்மீர் தொடர்பான புகைப்பட கண்காட்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களின் அமைய காஸ்மீர் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையினை பெற்றுகொடுப்பதற்கும் அங்கு கொல்லப்பட்ட மக்களை நினைவுகூறுமுகமாகவும் பாகிஸ்தான் அரசு 1990ஆம் ஆண்டு தொடக்கம் பெப்ரவரி 5ஆம் திகதி காஸ்மீர் ஒற்றுமைத் தினம் அனுஷ்டித்து வருகின்றது.

இவ் வருடாந்த நிகழ்வு இந்திய ஆக்கிரமிப்பு காஸ்மீர் மக்களின் விடுதலைக்கான போராட்டத்திற்கு வலுசேர்ப்பதற்காகவும் இந்திய ஆக்கிரமிப்பிற்கு கண்டனம் தெரிவித்து காஸ்மீர் மக்களின் உரிமையினை பெற்றுக் கொள்வதற்கான பொது ஜன வாக்கெடுப்பினை வலியுறுத்தியும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அத்துடன் உலகமெங்கிலும் வாழ்கின்ற மக்கள் காஸ்மீர் மக்களுடன் இணைந்து போராட்டங்கள், மனித சங்கிலி மற்றும் அமைதியான பேரணிகளில் ஈடுபடுகின்றவர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லமின் பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு தர்க்கா நகர் சாஹிரா கல்லூரி விளையாட்டுத் திடல் அண்மையில் அஸ்லமினால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி, கால் பந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய கழுத்துறை புழு ஸ்டார் மற்றும் பேருவளை இலவன் கழகங்கள் பங்கு பற்றின. அல்ஹாஜ் அஸ்லம் வெற்றிக் கேடயத்தை வெற்றிபெற்ற கழுத்துறை புழு ஸ்டார் அணித் தலைவருக்கு வழங்குவதனையும், விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்படுவதனையும், வீரர்களுடன் அதிதிகள் கைலாகு கொடுப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள் - பீ.எம். முக்தார், பேருவளை)

நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள

பள்ளிவாசல்கள் மற்றும் பாடசாலைகளுக்கு குடிநீர் இணைப்புக்கான நிதி கையளிப்பு

(எம்.முஹம்மட் ஜபீர், சம்மாந்துறை)

நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சுகாதார மத்திய நிலையங்கள் என்பனவற்றிற்கு குடிநீர் இணைப்பினை பெற்றுக் கொள்வதற்காக தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் மெஸ்றோ அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் மேற்கொண்ட முயற்சியின் பயனாக டுபாய் நாட்டின் அட்லான்டிக்கா நிறுவனத்தின் தலைவரும், தொழிலதிபருமான ஷெய்க் நாசிம் அஹமடினால் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

சவளக்கடை பிரதேசத்திலுள்ள 6ஆம் கிராமம் பெரியகுளம் ஜும்ஆப் பள்ளிவாசல், 5ஆம் கிராமம் ஸபூரியா ஜும்ஆப் பள்ளிவாசல், வீரத்திடல் மபாஸா ஜும்ஆப் பள்ளிவாசல், சவளக்கடை அர்-ரகுமான் ஜும்ஆப் பள்ளிவாசல், வீரத்திடல் அல்-ஹிதாயா மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சவளக்கடை மத்திய குழு தலைவர் எம்.ஐ.எம். அஸீஸ் தலைமையிலும்,

5ஆம் கிராமம் அல்-ஹிக்மா பாடசாலை மண்டபத்தில் சாளம்பைக்கேணி - 04 ஹைரியா ஜும்ஆப் பள்ளிவாசல், சாளம்பைக்கேணி-04 ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல், சாளம்பைக்கேணி-03 நூராணிய ஜும்ஆப் பள்ளிவாசல், சாளம்பைக்கேணி 12 கிராமம் அல்-சிராஜ் மகா வித்தியாலயம் சாளம்பைக்கேணி-03 சுகாதார மத்திய நிலையம் ஆகியவற்றுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாளம்பைக்கேணி மத்திய குழு தலைவர் எம்.எச்.மஹ்ரூப் தலைமையிலும்,

சாளம்பைக்கேணி ஸாஹிரா பாலர் பாடசாலையில் மத்தியமுகாம் ஜி.எம்.எம்.எஸ் வித்தியாலயம், 4ஆம் கிராமம் அல்-ஹிறா பாடசாலை, மத்தியமுகாம் முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல், 4ஆம் கிராமம் பலாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியவற்றிற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்தியமுகாம் மத்தியக் குழு தலைவர் ஏ.நளீம் தலைமையிலும் இந்நிதிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் மெஸ்றோ அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், டுபாய் நாட்டின் அட்லான்டிக்கா நிறுவனத்தின் தலைவரும் தொழிலதிபருமான ஷெய்க் நாசிம் அஹமட், பிரதி அமைச்சரின் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் எம்.அலி ஜின்னா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாவிதன்வெளி அமைப்பாளர் ஏ.சீ.எம்.நஸார், பள்ளிவாசல் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உடுநுவரெயில் நடமாடும் வைத்தியமுகாம்

(எம்.எம்.எம். ரம்ஸீன், உடுநுவர)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு உடுநுவர அபிவிருத்தி நிதியம் நடாத்தும் மாபெரும் இலவச நடமாடும் வைத்திய முகாம் இன்று நடைபெறும்.

இம்மருத்துவ முகாம் உடுநுவர முறுத்தகஹமுளையில் அமைந்துள்ள நிதியத்தின் வளாகத்தில் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவின் ஆலோசனை எண்ணக் கருவிற்கமைவாக விளையாட்டுத்துறை அமைச்சின் வழிகாட்டலில் செயற்படுத்தப்பட்ட விளையாட்டு மற்றும் உடலாரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரம் - 2016 இன் இறுதி நாளை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலகம் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரச திணைக்களங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த விளையாட்டு விழாவின் போது எடுக்கப்பட்ட படம்.

(ஏ.ஜி.ஏ.கபூர், அக்கரைப்பற்று)

ஹஜ் முகவர்களின் மோசடிகளைத் தடுக்க புதிய விசாரணைக்குழு ஒன்று நியமனம்

(இக்பால் அலி)

ஹஜ் யாத்திரைகளின் போது முகவர்களினால் இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதற்காகவும் ஹஜ் யாத்திரையாளர்களுக்கு சிறந்த வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் முஸ்லிம் சமய கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமின் பணிப்புரைக்கு இணங்க புதிதாக விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சின் அந்தரங்கச் செயலாளர் எம்.எச்.ஏ. பாஹிம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த புதிய விசாரணைக் குழு சுயமாகவும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்பட வுள்ளது. இந்த விசாரணைக் குழுவுக்கு ஹஜ் குழுவினர்களுடைய தலையீடோ அல்லது அமைச்சருடைய எந்த தலையீடோ அல்லது வேறு எந்த அரசியல் தலையீடுகளோ இடம் பெறாது. விசாரணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதற்கு முழு அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

ஹஜ் முகவர்கள் தொடர்பாக பொது மக்களினால் முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுக்கள் பரிசீலனை செய்து நிரூபிக்கப்படும் பட்சத்தில் முகவருக்குரிய அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக தகைமை வாய்ந்த குழுவினர் நீதிபதி அப்துல் வாஹிட் அப்துல் சலாம் தலைமையில நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவில் சட்டத்தரணி அஹமட் நத்வி பதுர்தீன், நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எச். முயினுடீன் ஆகிய இருவரும் செயற்குழு உறுப்பினராகவும் இஸ்மாயில் ரபீக் செயலாளராகவும் நியமமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குழுவினருடன் ஹஜ் குழுவின் தலைவர் கலாநிதி சியாட் தாஹா, சட்டத்தரணி முஹமட் யாசீன், சட்டத்தரணி சிறாஜ் நூர்தீன், அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் எம்.எச்.ஏ.பாஹிம் உள்ளிட்டவர்களை இங்கு படங்களில் காணலாம்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திலுள்ள மாவடிவேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அண்மையில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜசிங்கமினால் அப்பாடசாலையின் நீண்ட காலத் தேவையாக இருந்த நிழற்படப் பிரதி இயந்திரம் பாடசாலை நிருவாகத்திடம் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(ஏறாவூர் நிருபர் - ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஹவ்வா மக்தபின் பரிசளிப்பு விழா இன்று

(வாஹிட் குத்தூஸ்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் வழிகாட்டலில் பதுளை ஒலியா மண்டியில் இயங்கும் ஹவ்வா மக்தப் பாடநெறியின் ஒரு வருட நிறைவும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் புவக்கொடமுல்ல பாத்திமா மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

ஹவ்வா நிருவாக சபையின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விசேட நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை தப்லீக்குல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் அரபுக்கல்லூரியின் பிரதியதிபர் அஷ்ஷெய்க் யூ.எல்.எம். அமீன் (தப்லீக்) ஹாஜியார் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

நிகழ்வில் உலமாப் பெருந்தகைகள், கல்வியாளர்கள் சமய சமூக, வர்த்தகப் பிரமுகர்கள் என பலர் கலந்து கொள்ள வுள்ளனர்.

குமாரிமுல்லை வித்தியாலயத்தில் கல்வி விழிப்புணர்வுகள் கூட்டம்

(பூகொட திருபர்)

பூகொட குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப் படவுள்ள கேட்போர் கூடத்திற்கான நிதி வசூலும் கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டமும் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் பூகொட, காணகல கெஹலிய வரவேற்பு மண்டபத்தில்பாடசாலைஅதிபர்எம்.எம்.எம்.சர்ஜூன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இங்கு மேல் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.எம். கபூர் சிறப்புரையாற்றவுள்ளார். வளவாளர்களாக பாலிர் மொஹிடீன், இஸட். எம்.எம். ஸம்னி ஆகியோர் கல்வியின்முக்கியத்துவம்பற்றிவிரிவுரையாற்றவுள்ளனர்.

இதன்போது பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடக் கட்டிடத்திற்கான நிதி வசூலும் இடம் பெறவுள்ளது.

கொடே கொட மு. வி. புதுக் கட்டிடம் இஸ்லாமிய கலாசார முறைப்படி திறந்து வைப்பு

ஹெம்மாத்தகம, கொடேகொட முஸ்லிம் வித்தியாலயத்தில் கொடேகொட சமூக அபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலைச்சமூகத்தின்உதவியுடன் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புது கட்டடம் இஸ்லாமிய கலாசார முறைப் படி அண்மையில் திறந்து வைக்கப் பட்டது.

பாடசாலை அதிபர் தேசமான்ய அல் ஹாஜ் ஏ.ஸீ.எம். அஸ்ஹரின் பெரு முயற்சியால் கட்டி முடிக்கப்பட்ட இரு மாடிக் கட்டிடம் கடந்த 28ம் திகதி இஸ்திஹாரா தொழுகையுடன் குர்ஆன் பாராயணம் செய்து பெற்றோர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எதிர்வரும் 22ம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதை முன்னிட்டு கட்டட வேலைகள் துரித கதியில் நிறைவு செய்யப்பட்டன. பாடசாலைகளில்வழக்கமானநடைமுறையில் இருந்துவரும் திறப்பு விழா அமைப்புக்கு முற்றிலும் மாற்றமான முறையில் இஸ்லாமிய, கலாசார நடைமுறைகளை பின்பற்றி பாடசாலைக் கட்டடம் திறக்கப் பட்டமையையிட்டு ஊர் மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். திறப்பு விழாவின் போது வருகை தந்திருந்த நூற்றுக் கணக்கான பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் ஆசிரியர் குழுவினரால் பலகாரம், கற்கண்டு, பேரீச்சம் பழம் வழங்கி உபசரிக்கப்பட்டது.

விகிதாசார தேர்தல் முறையே சிறந்தது முஸ்லிம் பிரதிநிதிகளின் கருத்து இது

முஸ்லிம் வாலிப முன்னணியின் தலைவர் பீ.எம். பாரூக்

தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையின் அடிப்படையிலேயே எதிர் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே உள்ளூராட்சி மன்ற முஸ்லிம் பிரதிநிதிகளின் அபிப்பிராயமாக உள்ளது என்று அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக் தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எல்லை நிர்ணயம் சம்பந்தமாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் கடந்தகால உறுப்பினர்களுக்கும் இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கும் வழிகாட்டல் செயலமர்வுகள் கடந்த 30, 31ந் திகதிகளில் குருநாகல், புத்தளம், அநுராதபுரம், கண்டி, (கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களுக்கு) ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இச்செயலமர்வுகளில் ஆர்வமுடன் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தற்போது முன்மொழியப்பட்டுள்ள தேர்தல் முறை மூலம் முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு மிக மிகக் குறைவாக இருப்பதோடு சில பிரதேசங்களில் முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய வாயப்பு அறவே இல்லாமல் செய்யப்பட்டிருப்பதால் தாம் இந்த தேர்தல் முறைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் எதிர்வரும் தேர்தல் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறைப்படியே நடாத்தப்படல் வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் இவ்வழிகாட்டல் செயலமர்வின் மூலமே தாம் தெளிவு பெற்றுள்ளதோடு விழிப்புணர்ச்சி அடைந்துள்ளதாகவும் சமூக நலன் கொண்டு நடாத்தப்படும் இப்பணிக்காக தாம் என்றும் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

இரட்டை அங்கத்தவர் அல்லது பல அங்கத்தவர் வட்டாரங்கள் மூலமும் 70 - 30 விகிதாசார முறை மூலமும் சிறுபான்மையினம் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டாலும் அது ஒரு வெறும் கண்துடைப்பு என்றும் இம்முறை மூலம் சிறுபான்மையினம் தெரிவு செய்யப்படும் வாய்ப்பும் இல்லை என்பதைத் தற்போது தாம் உணர்வதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

தற்போதைய எல்லை நிர்ணய முறை மூலம் முஸ்லிம்கள் செறிவாக வாழக்கூடிய பகுதிகள் திட்டமிட்டு கூறுபோடப்பட்டுள்ளதாகவும் சில நகரசபை வட்டாரங்கள் தரம் உயர்த்தப்படுவதற்குப் பதிலாக வட்டார எல்லைகள் சிங்கள பிரதேசங்களுடன் பிரித்து இணைக்கப்பட்டு பிரதேச சபைகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்தார்கள். எவ்வாறாயினும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அவர்கள் உடனடியாக குழுக்களை அழைத்து எல்லை நிர்ணயம் சம்பந்தமாக நுணுக்கமாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளார்கள். தமக்கு ஏற்பட்டுள்ள அதிதிகளை உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கும் எல்லை நிர்ணயக் குழுவுக்கும் அறிவிக்க அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இவ்வாறான செயலமர்வுகளை ஏனைய மாவட்டங்களிலும் நடத்துவதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இஸ்லாமிக் றிலீப் ஸ்ரீலங்கா நிறுவனம் போக்குவரத்துக்காக இடர்படும் கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்காக துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் திட்டமொன்றினை ஐக்கிய இராச்சியத்தின் வக்பு நிதிப் பங்களிப்புடன் முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி அக்கரைப்பற்று பாயிஸா மகாவித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளைக் கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை அதிபர் எம்.ஏ.ஏ.இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இப்பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ.எம்.ஜாபிர், எம்.எஸ். சீனத்துரை, பகுதித் தலைவர்களான திருமதி எச்.யூ.சாலிம், எஸ்.றியாஸ், எம்.ரீ.எம். மௌசூக் மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். படத்தில் துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களைக் காணலாம்.

(படம் - இறக்காமம் திருபர்)

சேருநுவர சோமாவதி பூங்காவில் யானையொன்று இறப்பு

(ஏ.எஸ்.எம்.தாஜீஸ்)

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோமாவதி தேசிய வனவிலங்கு பூங்கா பகுதியில் யானையொன்று இறந்துள்ளதாக வனவிலங்கு பரிபாலன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வீதியிலிருந்து சுமார் 800 மீற்றர் தூரத்தில் காட்டுப்பகுதியில் இவ் யானை இறந்துள்ளதாகவும் நேற்று காலை 7.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயம் செய்கின்ற அப்பிரதேசத்தில் பாதுகாப்பு மின்சார வேலியில் மின்சாரம் தாக்கியே உயிர் இழந்திருக்கலாம் என பொதுமக்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பா. உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூரின் நடவடிக்கையால் சம்மாந்துறையில் பிரமாண்டமான பொழுதுபோக்கு வலயம்

(திகாமடுல்ல திருபர்)

நீண்ட காலமாக சம்மாந்துறை பிரதேசத்தில்ஒரு பொழுதுபோக்கு வலயம் இல்லாத குறையை நிவர்த்திக்கும் முகமாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த போது பிரமாண்டமான பொழுது போக்கு வலயம் அமைப்பதற்கான காணிகள் அடையாளம் காணப்பட்டு இருந்ததுடன் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தது.

தற்போது பிரமாண்டமான பொழுது போக்கு வலயம் அமைப்பதற்கான அடையாளம் காணப்பட்ட காணிகளை சுவீகரிப்பதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று பெப்ரவரி 2ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்ஏ.மன்சூர், மாவட்டநில அளவையாளர் ரபீக், உதவி காணி ஆணையாளர் திருமதி. இப்திகார் லத்தீப், மாவட்ட காணி உத்தியோகத்தர் முஸம்மில் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். சுவீகரிக்கப்படும் 31 ஏக்கர் காணியில் மலர்ப்பூங்கா, நவீன மயமான சிறுவர்களுக்கான விளையாட்டுத்தொகுதி, நீர்த் தடாகம், சுற்றிவர நிழல்தரும் மரங்கள், கடைத்தொகுதிகள் உட்பட ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்களை கொண்ட பிரமாண்டமான வலயமாக உருவாக்கப் பட இருக்கிறது. குறித்த பிரமாண்டமான பொழுதுபோக்கு வலயம். சம்மாந்துறையில் அமையப்பெறும் பட்சத்தில் பல்லாயிரக்கனக்கான மக்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சாராயம் காய்ச்சி விற்பனை செய்தவருக்கு ஒரு இலட்சம் அபராதம் அல்லது ஆறு மாத சிறை

(எப்.முபாரக்)

மூதூரில் சாராயம் காய்ச்சி விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு மூதூர் நீதிமன்ற நீதிவான் ஜ.எல்.றிஸ்வான் ஒரு இலட்சம் ரூபாயினை தண்டப் பணமாக செலுத்துமாறும் அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆறு மாதம் சிறை தண்டனை விதித்து செவ்வாய் கிழமை (2) தீர்ப்பளித்தார். பூநகரிபுரம், கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த மயில் வாகனம் லாகரன் வயது(28)என்பவருக்கே அத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் மூதூர் பிரதேசத்தில் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு வந்திருந்த நிலையிலேயே நண்பர்களுடன் சேர்ந்து அனுமதியின்றி சாராயம் காய்ச்சி விற்பனை செய்து வந்த நிலையிலே மூதூர் பொலிஸார் கைது செய்து மூதூர் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மூதூர் நீதிமன்ற நீதிவான் தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார். குறித்த நபர் இதற்கு முன்னரும் இவ்வாறு சாராயம் காய்ச்சிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எமது மக்களின் வறுமையை கல்வியினூடாக ஒழிப்போம்

மடு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்

(இன்ஹாம் இமாம்)

எமது மக்களிடம் தாண்டவமாடும் வறுமையை கல்வியினூடாகவே ஒழிக்க முடியும்

இதனைக்கருத்தில் கொண்டு நாம் அனைவரும் எவ்விடர் வந்த போதிலும் எமது பிள்ளைகளின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். இதற்காக பெற்றோர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

மன் / ஈச்சளவக்கை அ.த.க பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய மடு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஏ.சுபாகரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் ஜே.கே.பயஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி போட்டி நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

எமது மக்கள் போரின் பேரவலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டு சகலவற்றிலும் பெரும் பின்னடைவை சந்தித்த போதிலும் இப்பிரதேச பெற்றோர்களாகிய நீங்கள் கல்வியில் காட்டும் கரிசனையை எண்ணி சந்தோசமடைகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மன்னார் இராணுவ கொமான்டோ பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் ஜாலிய தெகிதெனியவும் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

மதுகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் அதிபர் ஏ.ஸீ.எம். ரிப்கான் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட உதவி கல்விப்பணிப்பாளர் யோகினி ராஜேந்திரன் மாணவரொருவருக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். அதிபர் ரிப்கான் மற்றும் ஆசிரியர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம் - எம்.எஸ்.எம். முன்தஸிர்)

மலையக மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வித்திட்டவர் சௌமிய மூர்த்தி தொண்டமான்

மத்திய மாகாண விவசாயத்துறை மற்றும் இந்து கலாசார அமைச்சர் மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

மலையகத்தின் தந்தை என போற்றப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமான் உருவாக்கிய இரண்டு தோட்டத்திற்கு நடுவில் ஒரு பாடசாலை என்ற திட்டமே இன்று மலையக கல்வி வளர்ச்சிக்கு முன்னோடியாக திகழ்கின்றது. எதிர்காலத்தில் பெருந்தோட்ட பகுதிகளில் தேயிலை தொழில் நிலைத்திருக்காது ஆகையால் அரசாங்க தொழிலுக்கு தொழிலாளர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற அவரின் சிந்தனையால் மலையக தமிழ் பாடசாலைகளில் இன்று 44 ஆயிரத்துக்கு மேலான ஆசிரியர்கள் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் பணிபுரிவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இது மேலும் உயர வேண்டும்.

அத்தோடு தொடர்ந்து வரும் அரச தொழில்களுக்கும் நமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டு இவர்களை தயார்ப்படுத்த வேண்டும் என மத்திய மாகாண விவசாயத்துறை மற்றும் இந்து கலாசார அமைச்சர் மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார்.

தனதுபன்முகப்படுத்தப்பட்ட 10இலட்சம் ரூபா நிதியில் வட்டகொடை வடக்கு மடக்கும்புரை சின்னகணக்கு தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலை கட்டிடம் ஒன்றை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அன்று அமரர். சௌமிய மூர்த்தி தொண்டமான் மலையகத்தின் கல்வி வளர்ச்சியை உருவாக்கவென 402 ஆசிரியர்களை நியமனம் செய்தார். ஆனால் அவர்கள் வடக்கு. கிழக்கு பகுதியை சார்ந்தவர்கள் அவர்கள் ஊடாக கல்வி கற்று இன்று 44 ஆயிரத்துக்கு மேலான ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் சேவையாற்றுகின்றார்கள் என்றால் அதற்கு வித்திட்டவர் அமரர். சௌமிய மூரத்தி தொண்டமான் தான்.

அமரர். சௌமிய மூர்த்தி தொண்டமான் சேவை காலத்தில் வீடு கட்டவோ. ஆலயம் அமைக்கவோ, அல்லது வீதிகளை அமைக்கவோ ஆசைப்பட்டதில்லை. இரண்டு தோட்டத்திற்கு நடுவில் ஒரு பாடசாலை அமைய வேண்டும் என்பதே அவரின் இலக்காக இருந்தது.

அரசியல் ரீதியாக அனைவரும் ஒன்று பட்டு மலையக கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். இதனூடாகவே மலையகம் மாற்றமடையும்.

குற்றவாளிகள் உருவாகுவதில்லை. சூழ் நிலைகளே குற்றவாளிகளை உருவாக்குகின்றது. மலையகத்தை பொருத்த வரை சிறு பராயத்திலேயே அவர்களை சிறுவர் பள்ளியில் சேர்த்து நல்லொழுக்கத்துடன் கல்வியை கற்பிக்க பெற்றோர்கள் முன்வருவார்களாயின் அவர்கள் நாட்டுக்கு நல்ல பிரஜைகளாகவும் தலைவர்களாகவும் மாற முடியும். அதை விடுத்து வீட்டுக்கு வருமானம் தேவை என்பதற்காக இடைநடுவில் கல்வியை விட்டு பிள்ளைகளை கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கு வேலைக்கு அமர்த்து வதை பெற்றோர்கள் முற்றாக தடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

நாகூர் ரிகாஹ் சேவை

உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித்தருவதற்கு எம்மை நாடவும். உண்மையான 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர். M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P : 077 2810009. Email - nrahmathullah786@yahoo.com

பெயர் மாற்றம்

அப்புத்தளை இல. 82/12 புகையிரத வீதியைச் சேர்ந்த சின்னையா ஆகிய நான் 2008ம் வருடம் முதல் புனித இஸ்லாமை மதத்தை ஏற்றதால் எனது பெயரை மொஹமட் சல்மான் என மாற்றியுள்ளேன்.

இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சார்பில் பொது மக்கள் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

- மொஹமட் சல்மான்

இலங்கையில் முதலாவது டெங்கு நோயாளி 1962 ஆம் ஆண்டு இனங்காணப்பட்டார். அவர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

தீவிரமடையும் டெங்கு

2002 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் டெங்கு நோயில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை

வருடம்		டெங்கு நோயாளர்கள்
2002	-	8931
2003	-	4672
2004	-	15463
2005	-	5994
2006	-	11980
2007	-	7332
2008	-	6607
2009	-	35095
2010	-	34105
2011	-	28140
2012	-	44456
2013	-	32063
2014	-	32362
2015	-	20457





பா.மலரம்பிகை

இலங்கையில் தற்போது பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நோய்களில் பிரதானமாக டெங்கு முன்னிலை வகிக்கின்றது. ஆரம்பத்தில் நுளம்புகளினால் மலேரியா, சிக்குன் குன்யா, யானைக்கால் நோய் போன்ற நோய்கள் மனிதர்களை தாக்கியிருந்தாலும், நுளம்பினால் உயிரையே ஆட்கொள்ளும் நோயாக இன்று டெங்கு பிரதான இடத்தை வகிக்கின்றது.

இலங்கை முழுவதிலும் அண்மைக்காலமாக 3 ஆயிரத்து 333 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலும் கொழும்பு மாவட்டம் 1,316 பேருடன் முதலாவது இடத்தில் இருக்கின்றது. மேலும், கம்பஹா மாவட்டம் 640 பேருடன் இரண்டாவது இடத்திலும், யாழ். மாவட்டம் 137 பேருடன் மூன்றாவது இடத்திலும், கண்டி மாவட்டம் 133 பேருடன் நான்காவது இடத்திலும், அதற்குப் பிறகு ஏனைய மாவட்டங்கள் வருவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் எம்.தௌபீக் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காய்ச்சல் குணங்குறிகள் தோன்றி இரண்டு நாட்களுக்குள் நோயாளி வைத்திய சிகிச்சை பெறத் தவறுவதே டெங்கு நோய் மரணத்துக்கு முக்கிய காரணமாகும். இரண்டு நாட்கள் தாமதமானால் நோயின் தாக்கம் தீவிரமடைந்து சிகிச்சை பலனற்றுப் போக இடமுண்டு. எனவே, எவ்வித காய்ச்சலானாலும் இரண்டு நாட்களில் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உயிரிழப்புகளை முற்றாகத் தடுக்கலாம் என டாக்டர் தௌபீக் தனது அறிக்கை மூலம் தெரிவித்தார்.

டெங்கு நோய் அதிகரிப்பின் காரணமாக சுகாதார அமைச்சினால் மீண்டும் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பமாக அமுல்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் முதலாவது டெங்கு நோயாளி 1962 ஆம் ஆண்டு இனங்காணப்பட்டார். அவர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டம் கட்டமாக இந்நோய் பரவலை[illegible]ந்து தற்போது இலங்கையில் டெங்கு நோயாளர்கள் இல்லாத மாவட்டங்களே இல்லை என்பது போல் ஆகிவிட்டது. அந்த வகையில் கடந்த வருடம் (2015) 20,457 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுள் 36 பேர் உயிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டெங்கு நோயை முற்றாக தடுப்போம், நீக்குவோம், ஒழிப்போம் என எத்தனையோ விழிப்புணர்வு திட்டங்கள் மேற்கொண்டாலும், அந்த நோய் வராமல் தடுப்பது ஒவ்வொருவரின் செயற்பாட்டிலே காணப்படுகின்றது. டெங்கு பற்றிய விழிப்புணர்வை பெற்றுகொள்வதற்கு முன் டெங்கு காய்ச்சல் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வது முக்கியமானதாகும்.

டெங்கு என்றால் என்ன ?

டெங்கு நோய் என்பது, நுளம்புகளின் மூலம் பரவும் ஒருவகை வைரஸ் நோய். இது சாதாரண மாக, திடீரென பாதிப்பை ஏற்படுத்தி, அதிக காய்ச்சல், தலைவலி, உடம்பு வலி, கடுமையான தசை வலி, சோர்ந்து போதல், மூட்டு வலி, கண்ணின் பின்புறம் வலி மற்றும் தோலில் ஒரு வகை நிற மாற்றத்தை ஏற்படுத்தும். இதில் குறிப்பாக காய்ச்சல், தோல் நிற மாற்றம், தலைவலி தான் எல்லா டெங்கு நோயாளிகளுக்கும் இருக்கும் மூன்று நோய் அறிகுறிகளாகும். இது போக இரத்த கசிவுகளை ஏற்படுத்தலாம்.

இது நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களை அதிகம், கடுமையாக பாதிக்கும். இந்த நோய், நான்கு வகையான வைரஸ்களால் உண்டாக்கபடுவதால், ஒருவருக்கே பலமுறை டெங்கு வரலாம். ஆனால் டெங்கு வைரஸ் ஒரு வகையால், பாதிக்கபட்டால், அந்த வகை வைரஸுக்கு மட்டும், வாழ்நாள் முழுவதும், நோய் எதிர்ப்பு தன்மை உருவாகி விடும். மற்ற வகை வைரஸுக்கு எதிராக, நோய் எதிர்ப்பு தன்மை வராது.

டெங்கு எப்படி பரவுகிறது?

ஏடிஸ் ஈஜிப்டி (Aedes aegypti) என்னும் உடலில் கோடுள்ள, பகலில் கடிக்கும் நுளம்பு மூலம் இந்த வைரஸ் பரவுகிறது. இந்த நுளம்பு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபரை கடித்து தன்னுள் வைரஸை எடுத்து, மற்றவர்களுக்கு பரப்புகிறது. இந்த நுளம்பு அதிகமாக வீட்டினுள் பதுங்கி இருப்பதோடு, அதிகமாக மழை காலங்களில் இனபெருக்கம் செய்யும். மழை இல்லாத காலங்களில், தண்ணீர் தேங்கும் பூச்சாடிகள், பிளாஸ்டிக் பைகள், கேன்கள், தேங்காய் சிரட்டைகள், டயர்கள் போன்றவற்றில் இனபெருக்கம் செய்கிறது. இந்த வைரஸ் கொசுக்கடி மூலம் இல்லாமல், நேரிடையாக நோயாளியிடம் இருந்து மற்றவர்களுக்கு பரவாது. நோயாளியிடம் இருந்து, நுளம்புகள் போய் கடித்து பின்னர் தான் அடுத்தவர்களுக்கு பரவும். மேலும் நோயாளியை தொடுதல், அருகில் இருத்தல் மூலம் இந்நோய் பரவாது.

டெங்கு அறிகுறிகள்

நுளம்பு கடித்து, நோய் வருவதற்கு 5 நாள் முதல் 15 நாள் வரை ஆகும். ஆரம்பத்தில் குளிர் காய்ச்சல், தலைவலி, கண்ணை சுற்றி வலி, முதுகு வலி, பின்னர் கடுமையான கால் மற்றும் மூட்டு வலி நோய் வந்து சில மணிநேரத்தில் கடும் காய்ச்சல் வரும். இலேசாக, நாடித் துடிப்பு குறைதல், இரத்த அழுத்தம் குறைதல், கண்கள் சிவந்து போதல், உடலில் தோலில் சிகப்பு நிற மாற்றம் ஏற்படல், கழுத்து மற்றும் பிறப்பு உறுப்பு அருகே நெறிகட்டல் போன்ற அறிகுறிகளை வைத்து நோயை கண்டுப் பிடித்துவிடலாம். டெங்கு நோயில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் வெப்பம் சாதாரணமாகவும், நல்ல ஆரோக்கியமாக இருப்பது போலவே தோன்றும். அதேகமானோர் நினைப்பதுண்டு தாம் நோயிலிருந்து மீண்டுவிட்டோம் என்று ஆனாலும், சில நாட்கள் கழித்து மீண்டும் காய்ச்சல் மற்றும் தோலில் நிறம் மாற்றமானது முகம் தவிர எல்லா பகுதியிலும் தோன்றுவதேடு, உள்ளங்கை மற்றும் கால் பாதம் சிவந்து தடிக்கலம்.

டெங்கு நோய் சிகிச்சை முறை

டெங்கு காய்ச்சலுக்கென்று தனியான மருந்துகள் கிடையாது. காய்ச்சலை குறைக்க சாதாரண வலி நிவாரணி மற்றும் நன்றாக நீர் ஆகாரங்கள் உட்கொள்ளுதல் தான் இதற்கு சிகிச்சை. மேலும் வைத்தியரின் அறிவுரை இல்லாமல், வலி நிவாரணிகள் எடுப்பதன் மூலம் இரத்த இழப்பு அதிகமாகலாம். இதனால் ஒரு வீதம் குறைவானாலும் டெங்கு நோயினால் உயிழப்பு நேரிடும்.

டெங்கு நோயை தடுக்கும் முறை

டெங்கு வைரஸ் நோயாளியிடம் இருந்து நுளம்பு மூலம் பரவும் சுழற்சியை தடுக்க வேண்டுமெனில், டெங்கு தொற்றுக்குள்ளானவர்கள் நுளம்பு புவலைக்குள் நோய் சுகமாகும் வரை இருத்தல் வேண்டும். டெங்கு வைரஸை பரப்பும் நுளம்பான aedes நுளம்பை ஒழிக்க அல்லது கட்டுபடுத்த வேண்டும் .பழைய டயர், வீசி எரியபட்ட பூச்சாடி, பிளாஸ்டிக் பைகள், கேன்களில் தண்ணீர் சேராத வாறு பார்த்துக்கொள்ளவேண்டும். தேவையற்ற பொருட்களை அகற்றி விடவேண்டும்.

தண்ணீரை நிரப்பி வைக்கும் பாத்திரங்களில் மூடி வைக்கும் நிலை ஏற்பட்டால், இரண்டு நாட்களுக்கு மேல் பார்த்து கொள்ளவேண்டும். அதை நன்றாக மூடி, நுளம்பு வராதவாறு பார்த்து கொள்ளவேண்டும். பொதுவாக இந்த நுளம்புகளின் வாழ்க்கை சுழற்சி ஏழு நாட்கள் என்பதால், தேங்கி நிற்கும் சுத்தமான நீர் ஏழு நாட்களை தாண்டிவிட்டால் நுளம்பானது இனப்பெருக்கம் செய்து தனது வாழ்க்கை சுழற்சியை முடித்து பரவ ஏதுவாக அமைந்து விடும். நுளம்பு கடிக்காமல் இருப்பதற்கு நித்திரைக்கும் செல்லும் போது கை கால்களை

(11ஆம் பக்கம் பார்க்க)

சட்டத்தரணி
ஏ.எம்.வைஸ்

கேள்வி பதிவு செய்யாத வாடகை ஒப்பந்தத்தின் நிலை என்ன?

பதில் நான் ஒரு கடையை வாடகைக்கு எடுத்தேன். அதற்கு எழுத்திலே உரிமையாளருடன் ஒப்பந்தம் செய்துகொண்டேன். எழுத்துமூலம் ஒரு நொத்தாரிஸால் தயாரிக்கப்பட்ட இந்த உறுதியை நம்பிக்கை காரணமாக காணிப்பதிவகத்தில் பதிவு செய்யவில்லை. கடையை வாடகைக்கு எடுத்து ஒரு வருடமாகியும் நான் கடையை திறக்கவில்லை. சென்றமாதம் வேறொருவர் அங்கு தனது வர்த்தகத்தை ஆரம்பித்துள்ளார். நான் சென்று கேட்டபோது அவர் ஒரு குத்தகை உறுதியைக் காட்டினார். அது காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது ஒப்பந்தம் இதற்கு முன்னைய திகதில் எழுதப்பட்டது. என்ன செய்யலாம்? குத்தூஸ்-கெகிராவ

எமது நாட்டில் உள்ள சட்டங்களின்படி பதிவு செய்யப்பட்ட உறுதிகளும் பத்திரங்களுமே முன்னுரிமை பெறுகின்றன. நீங்கள் பின்னைய ஒப்பந்தத்துக்கு முன் எழுத்துமூலம் நொத்தாரிஸ் உறுதிப்படுத்திய உறுதியை வைத்திருந்தாலும் அது பதிவு செய்யப்படவில்லை. எனினும் பின்னையவர் அதனை பதிவுசெய்துள்ளார். இதனால் பின்னையவரின் குத்தகை ஒப்பந்தம் முன்னுரிமை பெறுகிறது.

வழமையாக எமது மக்கள் பதிவு செய்யும் விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை. சிலர் அதற்கு முத்திரை செலவு உண்டு என்பதால் சிக்கனத்துக்காக பதிவு செய்வதில்லை. காணி பரிமாற்றங்களின் போது மாத்திரம் அக்கறையுடன் பதிவு செய்து கொள்கின்றனர். சிறிய பண இலாபத்தை பார்ப்பதனால் பாரிய நஷ்டங்கள் வரும் நிலையும் ஏற்படலாம்.

அதேபோன்று காணியை வாங்கும் போதும் எழுதும் உறுதியை காலதாமதமின்றி பதிவு செய்யவும் வேண்டும். சிலர் நொத்தாரிஸுக்கு பணம் கொடுக்க தாமதிப்பதனால் அவர்கள் பதிவுக்கு சமர்ப்பிக்க பிந்தவைக்கின்றனர். ஏனெனில் இப்போது முத்திரைப் பணத்தை வங்கியில் செலுத்தி அந்த பற்றுச்சீட்டை உறுதியுடன் இணைக்க வேண்டியுள்ளது. பணத்தை செலுத்த பிந்துவதனால் பதிவுக்கு சமர்ப்பிக்கவும் பிந்துகிறது. இதற்கிடையில் அந்தக் காணியை வேறு ஒருவர் பெயருக்கு விற்று அதை பதிவுசெய்துவிட்டால் முன்னைய உறுதியின் சட்ட முன்னுரிமை இல்லாது போய்விடும்.

எனவே வாடகை, குத்தகை உட்பட எல்லா உறுதிகளும் பதிவுசெய்யப்படுவது பாதுகாப்பானது. அதேபோன்று இவை காலதாமதம் இன்றி பதிவு செய்யப்படுவதும் அவசியமாக உள்ளது.

கடனை செலுத்தாவிட்டல்

கேள்வி– ஒருவர் என்னிடம் கடன் பெற்றுள்ளார். அதனைப் பெற்றதாக ஒரு கடிதம் தந்துள்ளார். அவர் அந்தக் கடனைத் தருவதாக இல்லை. அந்தக் கடிதத்தை வைத்து சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா?

பதில் கடன் கொடுத்தமைக்கு ஆதாரமாக அந்த கடிதத்தை நீங்கள் காட்டலாம். எனினும் கடன் கொடுக்கும் போது அதற்கு பெற வேண்டிய ஒரு பத்திரம் இருக்கிறது. அது புரோமசிரி நோட் ஒன்றை (PROMISORY NOTE) எனும் பத்திரத்தில் எழுதிக்கொள்வதே சிறந்தது. அவ்வாறு உறுதிமொழியொன்றை கடன் வாங்கியவரிடமிருந்து பெற்றிருந்தால் அதனை வைத்து மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யலாம். அந்த புரோமசிரி நோட் முறையாக எழுதப்பட்டிருக்க வேண்டும். முத்திரைகளின் மேல் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டிருக்க வேண்டும். ரூபா பத்தாயிரத்துக்கு குறைவாயின் 2/= முத்திரையும் அதற்கு மேலாயின் ஆயிரம் ரூபாவுக்கு ஒரு ரூபா வீதம் முத்திரை ஒட்டப்பட்டுகையொப்பமிட்டிருக்க வேண்டும். இந்த புரோமசிரி நோட் பத்திரங்களை மிகச் சிறிய விலையில் கடைகளில் வாங்கலாம். இதற்கு நொத்தாரிஸ் உறுதிப்படுத்துவது முக்கியம் அல்ல.

சட்டம் தொடர்பான உங்கள் பிரச்சினைகளை எங்களுக்கு அனுப்பிவையுங்கள் இதற்கான பதில்கள் பிரபல சட்டத்தரணிகளால் வழங்கப்பட்டு அவை நவமணியில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சட்டம் பேசுகிறது
நவமணி
156, Hospital Road,
Kalubowila, Dehiwala.

மலர் (காத்தான்குடி) — ஸஹ்னாஸ் சமூன்

தென்னைமரம் (பேருவளை) — அஜ்மல் நஸீர்

மாலைநேரம் (காத்தான்குடி) — பாத்திமா நுஷா

சுதந்திர தினத்தை கொண்டாடும் இலங்கையை பலஸ்தீன் வாழ்த்துகிறது

நாட்டின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பலஸ்தீன் விடுதலை இயக்கத்தலைவருமான மஹ்முத் அப்பாஸ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளதாவது,

உங்கள் நாடு சுதந்திரமடைந்துள்ள இந்தாளில் எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பலஸ்தீன ராஜ்ஜியமும் அதன் மக்களும் இந்த மகத்தான சந்தர்ப்பத்தில் உங்கள் நாடு அபிவிருத்தியும் முன்னேற்றமும் அடைய வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

அதேவேளை நமது இரு நாடுகளுக்களுக்கிடையிலான உறவைப்பேணுவதிலும் அதனை உறுதியுடன் கட்டிக் காப்பதிலும் தாங்களும் நாட்டு மக்களும் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்காக நான் மகிழ்ச்சியடைவதுடன் இவ்வுறவு மேலும் வலுவடைய வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.

அலாத் சாலி பவுண்டேஷன் ஐக்கிய இராஜ்ஜிய தொண்டு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வசதி குறைந்தவர்களுக்கான வீடமைப்புத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் ஆரம்பக்கட்டமாக உடதலவின்னையிலும் மடவள பிகில்லதெனிய ஆகிய இடங்களில் வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நடப்படுவதைப் படங்களில் காணலாம். இந்த நிகழ்வில் மாகாண சபை அங்கத்தவரின் ஏற்பாட்டாளரும் இணைப்புச் செயலாளருமான ஏ.எச்.தௌபீக், எம்.ஐ.எம்.பஸ்லி அபூஹாஜி உட்பட பிரதேச மக்களையும் படங்களில் காணலாம். (மடவள பஸார் நிருபர்)

தடுப்பு மருந்தை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கர்ப்பம் தரித்த பெண்களை தாக்கினால், பிறக்கக்கூடிய குழந்தைகள் பிறவிக்குறைபாடுகளை கொண்டிருக்கும்.

குறிப்பாக தலை சிறியதாக இருக்கும், மூளை பகுதியில் பாதிப்பு இருக்கும். பிரேஸிலில் இப்படி ஏறத்தாழ 4,074 குழந்தைகள் சிறிய தலைகளுடன் பிறந்துள்ளதால், அங்கு எதிர்வரும் 2018ஆம் ஆண்டுவரை பெண்கள் கர்ப்பம் தரிக்க வேண்டாம் எனஅறிவுறுத்தப்பட்டுள்ளது. சுமார் 40 இலட்சம் பேரை ஸிகா வைரஸ் தாக்கும் ஆபத்து உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இந்த வைரஸ் தாக்கினால் அதற்கு சிகிச்சையும் இல்லை. வராமல் தடுப்பதற்கு தடுப்பூசியும் இல்லை என்பதால் உலக நாடுகள் அலறுகின்றன.

உலக சுகாதார நிலையம் சர்வதேச அவசரநிலையை பிரகடனம் செய்துள்ளது. ஒருபுறம் உலக நாடுகள் தடுப்பு மருந்துக்கான தேடுதலில் தீவிரம் காட்டிவருகின்றன. ஏனைய உலக நிறுவனங்கள் ஸிகா வைரஸ் தடுப்புக்கான மருந்தை கண்டுபிடிக்க ஆராய்ச்சியில் களமிறங்கியுள்ளனர். இந்நிலையில், ஸிகா வைரஸுக்கு தடுப்பு மருந்து இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று ஐதராபாத்திலுள்ள பாரத் பயோடெக் சர்வதேச லிமிடெட் ஆய்வக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

'மேக் இன் இந்தியா திட்டத்தின் மிகவும் முக்கியம் வாய்ந்த நடவடிக்கையாக ஐதராபாத் ஆய்வு விஞ்ஞானிகள் உலகில் முதல்முறையாக ஸிகா வைரஸுக்கு எதிராக இரண்டு விதமான தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.

பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தின் தலைவரான டொக்டர் கிருஷ்ணா எல்லா இதுதொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

உலகில் முதலாவதாக ஸிகா வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடித்த நிறுவனம் நாமாக இருக்கலாம், சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்பே மருந்தை பாதிக்கப்பட்ட நபருக்கு செலுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது, எனத் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பூர்வமாக 'ஸிகா' வைரஸ் மாதிரியை இறக்குமதி செய்து இரண்டு விதமான தடுப்பு மருந்துகளை தயாரித்துள்ளோம். இந்த மருந்தை விலங்குகள் மற்றும் மனிதர்களிடம் அளித்து பரிசோதிக்க இந்திய அரசின் ஆதரவை நாடியுள்ளோம். இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையிலும் உதவி செய்ய முன்வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சூறாசபையின் ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்ததாக அதன் உப தலைவர் சட்டத்தரணி ரஷிட் எம்.இம்தியாஸ் தெரிவித்தார்.

குருநாகல் சுதந்திர தின ஏற்பாட்டு குழுவில் மாற்றுக் கட்சி ஆதரவாளர்கள் சிலர் இருந்ததன் காரணமாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து சூரா கவுன்சில் சுதந்திர தின விழாவை ரத்து செய்துள்ளது. இது குறித்து ஐ.தே.க. பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசீமின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதும் பயனெதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். கூட்டத்திற்கு பதிலாக கொழும்பில் மரநடுகை நிகழ்வொன்று மருதானை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது. சூரா கவுன்லில் தாரிக் மஹ்மூத் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேல்மாகாண முதலமைச்சர் இ்ரு தேவப்பிரிய பிரதம அதியாக கலந்துகொள்வார்.

எம்பிலிபிட்டிய ஏ.எஸ்.பி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் அத்தியட்சகர் தர்மரத்னவினால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சந்தேகநபர்கள் தங்கல்ல மற்றும் குருவிட்ட சிறைச்சாலைகளில் உள்ளமையினால், அவர்கள் மூலம் தக்க பாதுகாப்பை பெற்று தரும்படியும் நீதிமன்றில் அவதானம் செலுத்தப்படவேண்டும் என்றும் வழக்கு நிஞர்கள் தெரிவித்தனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கைக்கு இணங்க, அவர் குருவிட்ட விளக்கமறியல் சிறைச்சாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டார். இவரை தங்காலை விளக்கமறியல் சிறைச்சாலையில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், உதவி பொலிஸ் அத்தியட்சகரின் கோரிக்கையை அடுத்து அவர் குருவிட்ட சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, கமித் பிரசன்னவின் மரணம் தொடர்பில் சிசிரிவி காணொளி மற்றும் புகைப்படங்கள் இருப்பின் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி அறிக்கை எடுக்கும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

எம்பிலிப்பிட்டி இளைஞரின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்ட எம்பிலிப்பிட்டி பிரதேச சத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குறித்த இளைஞனின் மரணம் தொடர்பான வழக்கின் காரணமாக கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நாராஹேன்பிட்டி பொலிஸ் கராஜில் பணியமர்த்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்த அவர், வாக்குமூலத்தின் பின்னர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் 05ஆம் திகதி எம்பிலிப்பிட்டி நகரில் இடம்பெற்ற விருந்து வைபவம் ஒன்றின் போது சுமித் பிரசன்ன என்பரை மூன்றாம் மாடியிலிருந்து தள்ளி படுகொலை செய்ததாக எம்பிலிப்பிட்டி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, நேற்று நீதிமன்றில் ஆஜராகிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தர்மரத்னவுக்கு நிதிமன்ற வளாகத்தில் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததோடு, ஊடகவியலாளர்களை படம் பிடிக்கவிடாது வேறு வழியினூடாகவே நீதிமன்றத்துக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.

அரபு மொழியிலும், தேசிய கீதத்தை பாடவேண்டும் எனக் கேட்பார்கள்

மஹிந்த ராஜபக்ஷ

இதுவரையில்தமக்கு அழைப்பு கிடைக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆங்கில மொழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, தமிழையோ, சிங்களத்தையோ சரியாக உச்சரிக்க முடியாது.நாங்கள் ஆங்கிலத்தில்தான் தேசிய கீதம் பாட வேண்டும் என கோரிக்கை விடுப்பார்களாயின் என்ன செய்வது என கேள்விஎழுப்பினார்.

எதிர்காலத்தில் அரபு மொழியிலும் இலங்கையின் தேசிய கீதத்தை பாடவேண்டும் என கேட்பார் என்பதில் சந்தேகமில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பதிலில் குறிப்பிட்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பாணந்துறையில் விசேட நிகழ்வு

(பாணந்துறை நிருபர் ஏ.எல்.எம்.அஸ்வர்)

தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு பாணந்துறை ஜமாஅத்தே இஸ்லாமி கிளை வத்தல்பொளைஅதன் பணிமனையில் ஏற்பாடு செய்துள்ளது.

சுத்தமான சுற்றாடலில் சுதந்திரமாக சுவாசிப்போம் என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளதோடு இங்கு மரக்கன்றுகளும் இலவசமாக விநியோகிக்கப்படும்.

காத்தான்குடி முஹைதீன் பள்ளியில் சுதந்திர தின நிகழ்வுகள்

(மிப்றாஹ்ம் முஸ்தபா)

68 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு காத்தான்குடி பள்ளிவாசல்கள் கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய கூட்டமும் இன்று (4) காலை 8.30 மணிக்கு காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும்ஆப்பள்ளிவாயல் மேல்தளத்தில் அமைப்பின் தலைவர் மௌலவி கே.எம்.எம் மன்சூர் தலைமையில் நடைபெற வுள்ளது.

இன்று காலை தேசிய கொடியேற்றி தேசிய கீதம் இசைக்கப்பட்டு கிறாஅத் ஒதி நிகழ்வுகள் ஆரம்பமாகும். தேசிய சுதந்திர தின உரை, விசேட துஆப்பிரார்த்தனை என்பன இடம்பெறும். காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் பிரதம இமாம் மௌலவி ஏ.ஜி.எம் அமீன் பலாஹி மீராபள்ளி பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் பேஷ் இமாம் மௌலவி எம்.ஐ. ஆதம் லெப்பை பலாஹி ஆகியோர் விசேட உரையையும் நாட்டின் நல்லாட்சி நீடித்து நிலை பெறவேண்டி விசேட துஆப்பிரார்த்தனையை மட்டகளப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா தலைவரும் காதி நீதிபதியுமான மௌலவி எஸ்.எம். அலியார் பலாஹியும் நிகழ்த்துவார். வருடாந்த பொதுச்சபைக்கூட்டத்தில் கதீப்மார், இமாம்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் சவால்கள் தேவைகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறுமென செயலாளர் மௌலவி எஸ்.எம்.எம் முஸ்தபா தெரிவித்தார்.

நீர் வடிகாலமைப்பு சபையில் இன்று சுதந்திர தின நிகழ்வு

(பேருவளை நிருபர்)

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்பாடு செய்துள்ள சுதந்திர தின நிகழ்வு இன்று 4 ஆம் திகதி மு.ப8.30 மணிக்கு இரத்மலானை காலி வீதியிலுள்ள சபை தலைமையகத்தில் பதில் தலைவர் சபீக் ரஜாப்தீன் தலைமையில் நடைபெறும்.

தேசிய கொடியை அவர் ஏற்றி வைத்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பார். நிறைவேற்றுப்பணிப்பாளர் மஹிலால் சில்வா பொது முகாமையாளர் பி.டபிள்யு.ஆர் பாலசூரிய உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றுவர்.

தென்மாகாண ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் அக்மீமன பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா உள்ளிட்ட இருவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில் குறித்த வழங்கு விசாரணைகளின் போது, ஷான் விஜேலால் டி சில்வா நீதிமன்றத்தில் ஆஜராகாமையால், காலி பிரதம நீதவான் நிலுபுலி லங்காபுர மேற்படி பிடியாணை பிறப்பித்துள்ளார்.

எனினும், முதல்வர் தற்போது வெளிநாட்டில் உள்ளதாக அவரது சட்டத்தரணி நேற்றைய தினம் ட்டிக்காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அனைவரும் ஒன்றுபட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காலனித்துவத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க அனைத்துமக்கள் பிரிவினரையும் ஒன்றிணைத்துமுன் நின்று செயற்பட்டது போன்று,மக்களின் ஜனநாயக உரிமைகள்,உரித்துடைமைகளை அடக்கியொடுக்கி,

சர்வதேச நீதியாகதாடு அபகீர்த்திக்கு உட்பட்டுக் கொண்டிருந்த இருண்ட காலப்பகுதியில் சர்வாதிகாரத்திலிருந்தும்,குடும்ப ஆட்சியிலிருந்தும் நாட்டைமீட்டெடுக்க நாம் முன்நின்றுசெயற்பட்டோம். அதன் மிகச் சிறந்தபெறுபேறுகடந்தஆண்டு ஜனவரி 08 ஆம் திகதிபெற்றுக் கொண்டவெற்றியாகும்.

அவ்வாறு பெற்றுக் கொண்டசுதந்திரத்தை,நிலையான,மிகவும் அர்த்தபூர்வமான

சுதந்திரமாகமாற்றிக் கொள்ளும் பொறுப்பு தற்போது நம் அனைவர் மீதும் உள்ளது. அதற்காகவேண்டி இன,மத,கட்சிபேதமின்றி இலங்கை மக்கள் அனைவரோடும் கைகோர்த்து செயற்படுவது தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகக்காணப்படுகிறது.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும்,சுதந்திரமான,கௌரவம் மிக்க நாடாக எமதுதனித்துவத்தை சர்வதேசத்தின் முன்னேநாம் மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். சட்டம்,ஒழுங்கு மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாத்து, முன்னேற்றகரமானசமூக,பொருளாதார சூழலில் நாட்டைக் கட்டியெழுப்பும் பாரியபணி நம் முன்பே உள்ளது.

இந்த மொத்தசெயற்பாட்டிலும் தமது வகிபாகத்தை ஒழுங்காக விளங்கி தேசத்தின் முன்னேற்றத்திற்காகஉண்மையான பிரஜைகளாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை இச்சுதந்திரதினத்தில் விசேடமாக மனதில் கொள்வோம்.

டெங்கு...

(10ஆம் பக்கத்தொடர்ச்சி)

நன்றாக மூடி வைக்க வேண்டும். நுளம்பு வலைகளை பயன்படுத்தலாம். வீட்டு கதவு ஜன்னல்களுக்கு நுளம்பு வலை அடித்து நுளம்பு வரவிடாது பார்த்துக் கொள்ளலாம். நுளம்பை விரட்டும் புகைகள் உபயோகபடுத்தலாம். ஆனால் சிலருக்கு இது சுவாச அலர்ஜி ஏற்படுத்தலாம்.

மேலும், இந்த நுளம்பானது பகல் நேரத்தில் அதிலும் குறிப்பாக சூரியன் உதிக்கும் மற்றும் மறையும் நேரத்திலே அதிகமாக கடிக்கும். எனவே அந்த நேரத்தில் கவனமாக இருப்பது நல்லது.

தற்போது டெங்கு நோயை அடுத்து நுளம்புகளினால் பரவுகின்ற சிகா என்ற நோயும் உலகளவில் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருகின்றது. குறிப்பாக கர்ப்பிணி பெண்களை இந்த சிகா வைரஸ் நுளம்பு கடிப்பதன் மூலம் கருவில் இருக்கும் குழந்தைகளை பாதிக்கின்றது.

எனவே நுளம்புகளால் பரவும் மேற்படி நோய்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் செயற்பட்டு எதிர்கால இலங்கையை ஆரோக்கியம்குந்த தேசமாக கட்டியெழுப்புவோம். சுருக்கமாக சொன்னால், நுளம்பை ஒழிப்பதன் மூலமும், நுளம்பு கடிக்காமல் பார்த்து கொள்வதன் மூலமுமே டெங்கு நோயை தடுக்க, ஒழிக்க முடியும்.

கெஹெலிய ரபுக்வெல்ல...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி இரவு, மனித உரிமைகள் தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை, காணாமல் போன, லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகன் தொடர்பிலான வழக்கு நேற்று யாழ் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கின் சாட்சியாளராக பெயரிடப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது தொடர்பாடல், மற்றும் மொழி பிரச்சனை ஏற்பட்டதன் காரணமாக வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன லலித் மற்றும் குகன் ஆகியோர் அரச பாதுகாப்பில் இருப்பதாக முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல முன்னதாக தெரிவித்திருந்தார்.

இது குறித்து சாட்சியமளிப்பதற்காகவே அவருக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் 13ம் திகதி சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோரை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் கெஹலிய ரம்புக்வெல்ல நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.

இந்நிலையிலேயே கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜராகி இருந்தார். நேற்றைய வழக்கு விசாரணை நிறைவுபெற்ற பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த கெஹெலிய ரம்புக்வெல்ல,

யாழ். நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்க வேண்டிவரும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே சாட்சியமளிக்க நீதிமன்றிற்கு ஆஜராகியிருந்தேன். மனித உரிமை செயற்பாட்டாளர்கள் காணாமல் போன சம்பவம் பற்றி தெரியும். தற்போது நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் கருத்து சொல்ல முடியாது. அதனை விரும்பவும் இல்லை. வழக்கு முடிந்த பின்னர் வந்தால், முழு விடயத்தினையும் கூறுகின்றேன் என்றார்.

நேர்வழி அரசியல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இணையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தலைமையிலான ஜன நாயகக் கட்சி நேற்று அரசின் பிரதானத் தூணான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்துக் கொண்டது.

இதுதொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;

ஒரு தனிக் கட்சியாக, எந்தவொரு பதவியையும் எதிர்ப் பார்க்காது, நாட்டுக்கு நல்லதை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டும் கடந்த மூன்றரை வருடங்களுக்கும் மேலாக நாம் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகிறோம்.

இவ்வாறான எமது இந்த அரசியல் பயணத்தை குறுக்கு வழியிலன்று நேர் வழியில் கொண்டுசெல்வதற்காகவே நாம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் தற்போது இணைந்துள்ளோம்.

எனக்கு தெரிந்தமட்டில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைப் போன்ற ஒரு சிறந்த சானக்கியமான ஒரு தலைவர் நாட்டில் இல்லை என்றே கூறவேண்டும். இப்படியான ஒருவருடன் இணைந்து நாம் அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்வதானது மிகவும் பெருமைக் குரிய ஒன்றாகும் என்பதையும் இங்கு கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

நாம் தற்போதன்றி 2010 ஆம் ஆண்டிலேயே, நாட்டிலிருந்த மோசமான அரசை விரட்டியடிக்க வேண்டும் என ஒன்றிணைந்தவர்கள். இந்த இணக்கப்படானது 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்ந்து நாட்டில் பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த வெற்றியை மேலும் முன்னோக்கிக் கொண்டு செல்லும் வகையிலேயே எமது அடுத்தக்கட்ட பயணம் அமையும். அதாவது, இரண்டு பக்கங்களிலும் கால் வைத்துப் பயணிக்காது ஐக்கிய தேசிய முன்னணி எனும் ஒரு பக்கத்தில் கால் வைத்து பயணிக்கவே நாம் தீர்மானித்துள்ளோம். இதிலேயே எமது எதிர்க்காலத்தின் வெற்றியும் தங்கியுள்ளது.

அதேநேரம், நாட்டின் ஜனாதிபதிக்கும் இவ்வேளையில் நான் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். அவர் குறித்தும் அவரது செயற்பாடுகள் குறித்தும் எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது. எனினும், அவர் தலைமையிலானக் கட்சியில் இன்னும் ராஜபக்ஷ கும்பல் இருந்துக் கொண்டுதான் உள்ளனர்.

அவர்கள் தற்போது வெற்றிலைச் சின்னத்தை சீர்குழைக்கவே முயற்சித்து வருகின்றனர். இந்தக் காரணத்தினாலேயே நாம் அக்கட்சியுடன் இணைந்துக் கொள்ளாது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ளோம். இந்தக் கூட்டணி நிச்சயமாக நாட்டுக்கு பெரும் வெற்றியாக அமையும். என்றார்.

காலிமுகத்திடலில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

9.15 மணிக்கு ஜனாதிபதி தேசிய கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதுடன் நண்பகல் 12 மணி வரை சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறும்.

தேசத்தின் வெற்றிக்காக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இன்றைய தினம் எமது 68ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நாம் தேசத்தின் சுதந்திரம், இறைமை மற்றும் ஆள்புல எல்லையைப் பாதுகாப்பதிலும் தேசிய நல்லிணக்கம் மற்றும் எமது மக்களின் பொருளாதார, அரசியல் உரிமைகளைப் பலப்படுத்துவதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்களையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.

ஒரு வருடத்திற்கு முன்னர் மக்கள் வழங்கிய ஆணைக்கு ஏற்ப, ஒரு நிலையான நல்லாட்சிக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக ஜனநாயகம், நல்லாட்சி, சட்டவாட்சி மற்றும் ஒரு அர்த்தமிக்க பாராளுமன்ற முறைமையினை ஏற்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்த சுதந்தர தினத்தைக் கொண்டாடுகின்றோம் என்றவகையில் இந்த நிகழ்வு விசேட முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. எமது எல்லா மக்களும் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஒரு சமூக, அரசியல் சூழலை உருவாக்கும் இப்பாதையில் தொடர்ந்தும் பயணிக்க நாம் உறுதியோடு உள்ளோம்.

இந்த அடைவுகளைத் தொடர்ந்து, நாம் புதிய அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளோம். கடந்த காலத்தின் பலமான சமூக, கலாசார மரபுரிமைகளை ஆர்வத்துடன் பாதுகாத்து எதிர்கால வெற்றிகளை நோக்கி முன்னேறும் அதேநேரம், சுதேச அறிவையும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதிலேயே எமது

சுதந்திரத்தின் பலம் பெரிதும் தங்கியுள்ளது என்பது எமது நம்பிக்கையாகும்.

இன்றைய தினம் சுதந்திரத்தின் அடைவுகளைக் கொண்டாடும் நாம் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் எமது இறைமையையும் ஆள்புல எல்லையையும் பாதுகாப்பதற்காக மிகப்பெரும் தியாகங்களைச் செய்த எமது பாதுகாப்புப் படையினருக்கு கௌரவத்தையும், மரியாதையையும் செலுத்துவது எமது கடப்பாடாகும்.

நீதி, மற்றும் மானிடத்திற்கான அர்ப்பணத்துடன் எமது நடுநிலை வெளிநாட்டுக் கொள்கை

சர்வதேச சமூகத்தில் எமக்கு பல நண்பர்களைப் பெற்றுத்தந்துள்ளது. சுபீட்சத்தை நோக்கிய எமது பயணத்தில் எமக்கு உதவ அவர்கள் தயாராகவுள்ளனர்.

சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நாம் எல்லோருக்கும் உண்மையான ஒழுக்கப்பண்பாடும் அறிவுபூர்வமானதும் சமத்துவமானதுமான சேவையை வழங்க எம்மை நாம் அர்ப்பணிப்போம். நாம் பெற்றுக்கொண்டுள்ள சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பேணிப் பாதுகாத்து நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்ததோர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உறுதிகொள்வோம்.

Sports விளையாட்டுச் செய்திகள்

சாதனை படைத்த இளம் வீரர் ரிஷப்!

பங்களாதேஷில் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. கடைசி லீக் போட்டியில் இந்திய அணி நேபாள அணியுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் தொடக்க வீரர்களாக ரிஷப் பன்ட், இஷான் கிஷான் ஜோடி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். இந்த ஜோடி தொடக்கம் முதலே நேபாள பந்துவீச்சை அடித்து நொறுக்கியது. அதிரடியாக விளையாடிய ரிஷப் பன்ட் 18 பந்துகளில் அரைச்சதம் அடித்து சாதனை படைத்தார். இதற்கு முன் 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச போட்டியில் மேற்கிந்திய தீவுகள் வீரர் ட்ராவான் கிரிஃப்பித் 19 பந்துகளில் அரைச்சதம் அடித்ததுதான் சாதனையாக இருந்தது.

சவாலை ஏற்றுக்கொள்ள நான் தயாராகவுள்ளேன்

கிரஹம் போர்ட்

இலங்கை அணி தற்போது வளர்ந்து வந்து கொண்டிருக்கும் அணியாக இருப்பதால், அணியை மீண்டும் கட்டியெழுப்பி, அணியின் வளர்ச்சிக்காக எந்தவொரு சவாலையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளேன் என இலங்கை அணியின் பயிற்சியாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் பயிற்சியாளராகப் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அணி போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெறுவதற்கு இன்னும் சில காலங்கள் செல்லும். குறிப்பாக அணியின் வெற்றிக்கு அனைவரது பங்களிப்பும் தேவைப்படுகின்றது. குறிப்பாக கடந்த 2012 முதல் 2014 வரை இலங்கை அணியின் பயிற்சியாளராக செயற்பட்டமையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.இலங்கை அணியுடன் மீண்டும் பணியாற்றக் கிடைத்தமை மிகப் பெரிய கௌரவம் என்றார். அத்துடன் இலங்கை அணியில் தற்போது இளம் வீரர்கள் அதிகமாக உள்ளார்கள். எனவே முழுமையான அணியொன்றைக் கட்டியெழுப்ப எனது பூரண பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளேன்.எனவே நான் சவாலை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளேன்.

குறிப்பாக சர்ரே அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு நேர்ந்தமையிட்டு கவலையடைகிறேன்.ஆனால் குமார் சங்கக்கார மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் விசேட வேண்டுகோளுக்கிணங்க இப் பொறுப்பை நான் மீண்டும் ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்தேன் என்றார்.

எனவே எனது அடுத்த இலக்கு இந்திய அணியுடனான 20க்கு 20 தொடரை சிறப்பான முறையில் நிறைவு செய்வதாகும்.அதற்காக நான் அணி வீரர்களுடன் தீவிர பயிற்சிகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இரண்டாவது தடவையாக இலங்கை அணியின் பயிற்விப்பாளராக கிரஹம் போர்ட் பணியாற்றவுள்ளதுடன், இவர் 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வரை இலங்கை அணியின் பயிற்சியாளராக கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெற்காசிய விளையாட்டு விழா:

இலங்கை ஹொக்கி ஆடவர் அணிக்கு இந்தியா செல்லத் தடை உத்தரவு

தெற்காசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றவிருந்த இலங்கை ஹொக்கி ஆடவர் வீரர்கள் இந்தியா செல்வதைத் தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி டீ.டி.குணசேகர நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திலுக மதுஷங்க வீரசூரிய எனும் வீரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை ஹொக்கி அணிக்கான வீரர்கள் தெரிவு உரிய முறையில் இடம்பெறவில்லை என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.எனவே, வீரர்கள் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதைத் தடுக்கும் வகையில் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு திலுக மதுஷங்க வீரசூரிய தாக்கல் செய்திருந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மனுவில் 23 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்தத் தடையுத்தரவு எதிர்வரும் 17ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்பதுடன் தெற்காசிய விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை அணியின் 2ஆவது குழு நாளை இந்தியா செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இம்முறை தெற்காசிய விளையாட்டு விழாவில் தேசிய பெட்மின்டன் சம்பியன்களான நிலுக கருணாரத்ன மற்றும் அவரது சகோதரர் திலுக கருணாரத்ன ஆகியோருக்கு இம்முறை போட்டிகளில் பங்கேற்க இலங்கை பெட்மின்டன் சம்மேளனம் அனுமதியளிக்கவில்லை.போட்டிகளுக்கான தெரிவுப் போட்டிகளில் இரண்டு வீரர்களும் வெளிநாடு சென்று இருந்தமையால் பங்கேற்கவில்லை.இதன்காரணமாக அவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாக். பழமையான கிரிக்கட் வீரர் காலமானார்

பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டவீரர் இஸ்ரார் அலி தனது 88ஆவது வயதில் காலமாகியுள்ளார்.நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவர் பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஒகாராவில் அமைந்துள்ள அவரது வீட்டில் கடந்த திங்கட்கிழமை காலமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1927 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இந்தியாவில் ஜலாந்தரில் பிறந்த இவர் 1952 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரிற்கான பாகிஸ்தானின் முதலாவது டெஸ்ட் அணியில் சகலதுறை ஆட்டவீரராக இடம்பெற்றிருந்தார்.

நடுத்தர வேகப்பந்து வீச்சாளரான இவர், தனது டெஸ்ட் கிரிக்கட் வாழ்க்கையை நிறைவு செய்வதற்கு முன்னர் 1959 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியுடனான இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். இதன் படி 1952 ஆம் ஆண்டு முதல் 1959 ஆம் ஆண்டு வரையில் 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இசார் அலி, பாகிஸ்தானின் பழமையான கிரிக்கட் வீரர்களில் ஒருவராவார்.

மெஸ்ஸியின் குட்டி ரசிகருக்குப் பரிசு!

பிளாஸ்டிக் பை சட்டையுடன் விளையாடிய ஆப்கான் சிறுவனை சந்தித்து மெஸ்ஸியின் நண்பர்கள் பரிசுகள் வழங்கியுள்ளனர் .

ஆப்கானிஸ்தானில் உதைப்பந்தாட்டத்தில் ஆர்வம் கொண்ட 5 வயதான முர்டாஸா அகமதி பார்சிலோனா உதைப்பந்தாட்ட வீரர் மெஸ்ஸியின் தீவிர ரசிகர்.மெஸ்ஸியின் ஜெர்ஸி வாங்கித் தருமாறு கேட்ட சிறுவனுக்கு அவரது சகோதரன் பிளாஸ்டிக் பையாலான ஜெர்ஸி ஒன்றை தயாரித்து தந்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து தகவல் அறிந்த மெஸ்ஸியின் தந்தை ஜார்ஜ் மெஸ்ஸி, சிறுவன் முர்டஸா அகமதிக்கு உதவி செய்ய விரும்புவதாக தெரிவித்துள்ளார்.இதனையடுத்து சிறுவன் முர்டஸா அகமதியை சந்திக்க லயோனல் மெஸ்ஸி ஆர்வமாக உள்ளதாகவும் இவர்கள் சந்திப்பு விரைவில் நடைபெறும் என ஆப்கானிஸ்தான் கால்பந்தாட்டச் சங்கம் அறிவித்திருந்தது.

இதற்கிடையே மெஸ்ஸியின் பி.ஆர் நிறுவனத்தை சேர்ந்த சிலர் அகமதியை சந்திக்க ஆப்கானிஸ்தான் வந்தனர்.அப்போது பரிசாக அகமதிக்கு புதிய ஜெர்சியும், கால்பந்தும் வழங்கப்பட்டது.

இளையோர் உலகக்கிண்ணம்

காலிறுதிப் போட்டி விபரங்கள்

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் இளையோருக்கான உலகக்கிண்ணப் போட்டித் தொடரின் முதல்கற்றுப் போட்டிகள் நேற்று நிறைவடைந்தன. அதன் பிரகாரம் நாளை ஆரம்பமாகவுள்ள தொடரின் கப்பர் லீக் காலிறுதிப் போட்டிகளுக்கு எட்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஏ பிரிவில் பங்களாதேஷ் நமீபியா அணிகளும் பி பிரிவில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளும், சி பிரிவில் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியும் டிபிரிவில் இந்தியா மற்றும் நேபாள அணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள முதலாவது சூப்பர் லீக் காலிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் மற்றும் நேபாள அணிகள் மோதவுள்ளன.

அத்துடன் இரண்டாவது சூப்பர் லீக் காலிறுதிப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி இந்தியா மற்றும் நமீபிய அணிகளுக்கு இடையிலும், மூன்றாவது சூப்பர் லீக் காலிறுதிப் போட்டி இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

நான்காவது சூப்பர் லீக் காலிறுதிப் போட்டி 8ஆம் திகதி மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ளது.

இந்த நான்கு கப்பர் லீக் காலிறுதிப் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் நான்கு அணிகளும் சூப்பர் லீக் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

மௌனம் கலைத்த யூனுஸ்கான்

பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யூனுஸ்கான், கடந்த நவம்பர் மாதம் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார்.

அபுதாபியில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியே அவரது கடைசி போட்டியாக இருந்தது. அவரது இந்த திடீர் முடிவு அதிர்ச்சிகரமாக இருந்தது. அதனைத்தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் மட்டும் அவர் விளையாடி வந்தார்.

இந்நிலையில் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றது ஏன்? என்பது குறித்து 38 வயதான யூனுஸ்கான் தற்போது விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என் மீது நம்பிக்கை வைக்கவில்லை. ஒருநாள் போட்டிக்கு ஏற்ற வீரராக என்னை கருதவில்லை. தோல்விக்கு என்னை குற்றம்சாட்டியது மிகவும் துரதிருஷ்டவசமானது. நான் திடீரென ஓய்வு முடிவை அறிவிக்கவில்லை. ஏனென்றால் தலைமை பயிற்சியாளர் வாக்கர் யூனுஸிற்க்கு இதுபற்றி தெரியும்.

நியூஸி. வேகத்தில் சுருண்டது ஆஸி.

அவுஸ்திரேலிய அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் 159 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றிபெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று ஒக்லாந்தில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 307 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் குப்டில் 76 பந்துகளை எதிர்கொண்டு 90 ஓட்டங்களையும் நிக்கொல்ஸ் 67 பந்துகளை எதிர்கொண்டு 61 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள மக்கலம் 44, சான்ட்னர் 35 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ஹசில்வூட், போக்னர், மற்றும் மார்ஷ் தலா 2 விக்கெட்டையும் ஹஸ்ரிங்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 24.2 ஓவர் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 148 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள 159 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றியை தனதாக்கியது.

அவுஸ்திரேலிய அணியின் சார்பில் துடுப்பாட்டத்தில் மெத்தியூ வேட் 37 மற்றும் போக்னர் 36 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் போல்ட், ஹென்றி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் சான்டனர் 2 விக்கெட்களையும் மில்னே மற்றும் ஆன்டர்சன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.போட்டியின் ஆட்டநாயகனாக நியூஸிலாந்து வீரர் குப்தில் தெரிவானார்.இதனால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

சர்தார்சிங் மீது பாலியல் புகார்!

இந்திய ஹொக்கி தலைவர்

இந்திய ஹொக்கி அணி தலைவர் சர்தார்சிங் 29 வயதான அவர் கடந்த 2008ஆம் ஆண்டு தலைவராக நியமிக்கப்பட்டார். இளம் வயதில் தலைவர் பொறுப்பை ஏற்ற பெருமைக்குரியவரான அவர் கடந்த ஆண்டு பத்மஸ்ரீ விருதை பெற்றார்.

சர்தார்சிங் மீது அவரது நீண்ட நாள் காதலி பரபரப்பான கற்பழிப்பு புகாரை கூறியுள்ளார். திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைகளை கூறி தன்னை பாலியல் துஸ்பிரயோகம் செய்ததாக அந்த பெண் ஹரியானாவில் உள்ள கம்கலான் பொலிஸ் நிலையத்தில் சர்தார்சிங் மீது புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக அந்த பெண் புகாரில் கூறி இருப்பதாவது:-

இந்திய வம்சாவழியை சேர்ந்த நான் இங்கிலாந்தில் வசிக்கிறேன். ஹொக்கி வீராங்கனை என்ற முறையில் 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியின் போது சர்தார்சிங்குடன் அறிமுகம் ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட நட்பு காதலாக மாறியது. திருமணம் செய்வதாக கூறி என்னிடம் வாக்குறுதி அளித்தார். அவரால் நான் கர்ப்பம் ஆனேன். பின்னர் அதை கலைக்க சொன்னார். என்னுடன் திருமண நிச்சயதார்த்தமும் செய்து கொண்டார். ஆனால் இப்போது திருமணம் செய்ய மறுக்கிறார். என்னை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் சர்தார்சிங் தொந்தரவு செய்கிறார். மேலும் என்னை மிரட்டுகிறார் என அந்த பெண் கூறியுள்ளார். இந்தப் புகாரின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். சர்தார்சிங் அரியானா மாநில பொலிஸார் துணை உயரதிகாரியாக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பெல்ஜியத்தில் நடைபெற்ற உலக ஹொக்கி சம்பியன் கிண்ண அரையிறுதிப் போட்டியின் போது, இந்திய அணி தங்கியிருந்த ஹோட்டலுக்கே அந்தப் பெண், பொலிஸாருடன் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. சர்தார்சிங் மீது புகாரளித்த பெண், இங்கிலாந்தின் லீட்ஸ் நகரைச் சேர்ந்தவர். அத்துடன் பிரிட்டன் ஹொக்கி அணியில், 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியில் இடம்பிடித்த முதல் கேக்கிய சமுதாய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றவர். அவருக்கு தற்போது 21 வயதாகிறது. புகாரைத் தொடர்ந்து சர்தார் சிங் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

19 வயதிற்குட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ண போட்டிகளில் பங்குபற்றியுள்ள இலங்கை அணி சார்பில் விளையாடும் கமிந்து மெண்டிஸ் தனது இரு கைகளாலும் சிறந்த முறையில் பந்துவீசுவது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.இத்தகைய திறமை அனைவரிடமும் காணப்படாத ஒன்று என கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் இவர் இத்தகைய முறையில் பந்து வீசியமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 04th February 2016